குமரகுருபரன்



மலர் 13] * சுபகிருது-ஸ்ரீ கார்த்திகை-மீ 1ம்-உ (16-11-62) [இதழ்
தனிப் பிரதி 13 நயா பைசா
வருடச் சந்தா ரூ. 1-

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்,
ஸ்ரீ காசிமடம் இளவாசு, திருப்பனந்தாள்

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினர் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20. நுங்கம்பாக்கம் ஹைரோடு. சென்னை – 6.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 13 || சுபகிருதுஸு கார்த்திகைத்திங்கள் 1-ம்உ [16-11-62] || இதழ் 11

சிதம்பரச் செய்யுட் கோவை

ஸ்ரீமத். சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

[முன்னைய முதுபெரும் புலவர்
உயர்திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்]

[கட்டுரை 62]

சிவபெருமான் திருவடிக்கண், தம் செந்தாமரைக் கண்ணை, ஒருமலராகச் சூட்டித், தாம் கொண்ட கொள்கைக்குரிய வழிபாட்டு முறைமைக்குச் சிறிதும் குறைவுண்டாகாத வண்ணம் நிறைவு செய்து, நன் மகிழ்வு எய்திய திருமாலார் செய்த சிவ பூசை வரலாற்றைப் புராணங்கள் பெரிதும் விளக்குகின்றன. காஞ்சிப் புராணத்தில்,

"நறைவாரும இதழ்துறுத்த செழும்பொகுட்டு நளினம்ஆ
யிரத்தில் ஒன்று
மறைவாகத் திருவுள்ளம் வைத்தருளக் கருவிமுகில்
வாட்டு மேனி

யிறையோனும் பண்டுபோல், பவன்முதலாம் ஆயிரம்பேர்
எடுத்துக் கூறிக்
குறையாத பேரன்பிற் பதுமமலர் கொடுபூசை
புரியும் எல்லை"

"பன்னும்ஒரு திருப்பெயர்க்கு நறுங்கமலம் காணுமைப்
பதைத்து நோக்கி
என்னினிமேற் செயல்என்று தெரிந்துணர்ந்து தனதுவிழி
இடந்து பெம்மான்
கொன்மலர்த்தாள் மிசைச்சாத்திக் களிகூர்ந்தான் உறுப்பிணையும்
கொடுப்ப தல்லால்
மென்மையுறத் தாம்கொண்ட விரதத்தை விடுவர்களோ
கொள்கை மேலோர்."

(திருமாற் பேற்றுப் படலம் 9 10)

என்ற இவற்றுட் குறித்த 'பவன்முதலாம் ஆயிரம்பேர்'களுள் பவாதி நாமம் சிவார்ச்சனை புரிவார்க்கு இன்றியமையாத சிறப்பின. திருநாவுக்கரசு நாயனுர்,

"சிவனெனும் நாமம் தனக்கே உடையசெம் மேனியெம்மான்
அவன்எனை ஆட்கொண் டளித்திடும் ஆகில் அவன்தனையான்
பவன்எனும் நாமம் பிடித்துத் திரிந்துபன் னுள்அழைத்தால்
இவன்எனைப் பன்னுள் அழைப்பொழியான்என் றெதிர்ப்படுமே"

என்னும் திருவிருத்தத்தில், இத் திருநாமங்களின் அந்தமில்லாச் சிறப்பைச் செந்தமிழர் சிந்தைகளிக்கத் திருவாய் மலர்ந்தமை காண்க. இத் தேவாரப் பாடலைத் தருமையாதீனத்தில் உள்ள திரு. சம்பந்தவோதுவார், சீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் திருக்கோயில் வழிபாடு நிகழ்த்தும் பொழுது, பெரும் பாலும் தென்முகக் கடவுள் திருமுன்னர்ப் பாடுவது வழக்கம். அவ்வேளையில், அடியேன் எண்ணத்தில் நிலவும் பாடல் இது :-
அதை,

"அகில நாமமும் எமக்குரிப்பெயராம்
அவற்றினும்பவன் முதற்பெயர் சிறப்பாத்
தகும். அவற்றினும் சம்புவே மயோபு
சங்கரன்மயக் கரன்சிவன் மற்றை

இகழருஞ்சிவ தரன்எனும் பெயர்கள்
இனியவாகும் அங் கெவற்றினும் மேலாய்ப்
புகழ்படைத்தஏ காம்பர நாதன்
எனப்புகல்பெயர் எமக்குமிக் கினிதாம் "

என்று ஏகாம்பரநாதரே இயம்பியருளினுர் எனின், அத் திரு நாமங்களின் சிறப்பை ஆரால் அளவிட்டுரைத்தல் கூடும்?

திருமால் தனது சிவ வழிபாட்டில் ஒருமலர்க்குறைவு ஏற்பட அதை நிறைவு செய்யக் கண்மலர்கொண்டு, உண்மகிழ்வுற்ற உண்மை வரலாற்றைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்,

" மால்ஆயிரம் கொண்டு மலர்க்கண் இடஆழி
ஏலா வலயத்தோ டீந்தான் உறைகோயில்
சேலாகிய பொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலால் எரிகாட்டும் வீழி மிழலையே "

என்னும் திருக்கடைக் காப்பால் குறித்தருளியதால், இது வேத வாக்குணர்த்தும் வரலாறுதல் வெளிப்படையாகும்.

இவ்வுண்மை வரலாற்றை உட்கொண்டு நோக்கினுல், இச் சிதம்பரச் செய்யுட் கோவையின் இப்பகுதி இனிது விளங்கும்.

" கடிக்கமலப் பார்வை வைத்தும் கண்ணனுர் காணுநின்
அடிக்கமலம் "

என்று திருவாய் மலர்ந்தார் குமரகுருபரர்.

இதன் கருத்து வெளிப்படை ஆயினும், பார்வை வைத்தும் காணுமை எங்ஙனம் என்று தோன்றும். அது தோன்றுதவாறு விளக்கம் வேண்டுவது இன்றியமையாத தாயிற்று. ஆதலால் தான், தமிழ்த் தெய்வத்தின் குறிப்புரை, இத்தாழிசையொடு ஒப்புநோக்கற்பாலது என்று, திருவாரூர் நான்மணிமாலையின் (31-ஆவது) பாடலைக் குறித்திருக்கின்றது. அது,

" தண்மல ரும்பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற
ஒண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலும் மற்றோர்புலவன்

பண்மலர் சாத்திப் பணிகொண்டவா பச்சை மால்சிவந்த
கண்மலர் சாத்தியும் காண்பரி தான கழன்மலரே.''

என்பது.

தண்மை மலரும் பொழிலையுடைய திருவாரூர்ப் பெருமானுக்குச் சார்த்துகின்ற ஒளியுடைய மலரால் ஆகிய பூமாலை பாமாலைக்கு நிகராகாது. ஒப்புயர்வில்லாத சுந்தரமூர்த்தி நாயனுர் தாம் அருளிய திருப்பதிகப் பாமாலைகளைச் சார்த்தினுர். அச்சார்த்து படியாலே அத் தியாகராசமூர்த்தியின் திருவடியை ஒருமுறைக்கு இருமுறை பரவை நாச்சியார் திருமாளிகைக்குச் சென்றுவரும் வண்ணம் ஏவல் கொண்டார். அத்திருவடி மலர், திருமால், தன் செந்தாமரைக் கண்மலரைச் சார்த்தியும் காண்டற்கு அரியதாயிற்று. அப்பச்சைமாலுக்கு அரிய கழல் மலர், நம் சமயாசாரியராகிய பாவலர் கோனுக்குத் திருவாரூர்த் திருவிதியிலே சிலமுறை உழல் மலர் ஆயிற்று. 'அரிது' என்று ஒருமையிற் கூறினும், இருகழல் என்றற்குத்தக இருமையாகக் கொண்டு அரியவான கழல் என்றல் நன்று.

இக் கருத்து, இவ்வண்ணமே, மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை வாக்கிலும், "மண்வைத்த குக்கி வளைவைத்த செங்கை மால் கண்வைத்தும் காணுக் கழலினன்'' என்று வந்துளது. கண் மலர்—(கண் + மலர்; கள் + மலர்) என்பது கண்ணுகிய மலர், கள்ளை (தேனை) உடைய மலர் என்றிரு பொருளது. மண்வைத்த குக்கி—பூமியை உண்டவயிறு. குக்ஷி—குக்கி.; தற்பவம்.

"மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆருரை
நன்னெடுங் காதன்மையான் நாவலர் கோனூரன்
பன்னெடுஞ் சொன்மலர்கொண் டிட்டன பத்தும்வல்லார்
பொன்னுடை விண்ணுலகம் நண்ணுவர் புண்ணியரே.''

என்பது நம்பியாரூரர் அருளிய திருப்பாட்டு. இதிற் "பன்னெடுஞ் சொன்மலர் கொண்டு இட்டன'' என்றுள்ளதைச் சொன்மலர்க்கு ஒவ்வாது போலும்' என்பதொடு ஒத்திட்டுணர்தல் வேண்டும். திருத்தொண்டர் புராணத்தில்,

"அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்ருர் தூமறை பாடும் வாயார்''

என்றுள்ளதும், அஃது இறைவன் திருவாக் காதலும் அக்கட்ட ளைப்படி சொன்மலர் சார்த்தியதும் நினைவிற்கொள்ளத் தக்கன. மறைபாடும் வாயார் தமிழ்ப்பாட்டை வேண்டியதால் தமிழின் சிறப்பை உணர்த்தியதாயிற்று.

இக்கலிப்பாவின் முதற்கண் உள்ள தரவில், நாலாம் அடியில் கருநோக்காத (நிவர்த்தி) மார்க்கத்தில், இரு (சூரிய சந்திர) நோக்கமும் (பகல் இரவு இல்லாத அங்கு) அருள் நோக்கமே செய்யும் என்று குறித்தார். அந்நோக்கம் பெருமை யால், திருமால், கடிக்கமலப் பார்வை வைத்தும் நடராசப்பிரான் திருவடிக் கமலம் காணார் ஆனார். தில்லையில் கோவிந்தராசப் பெருமாள் தெற்கே தலை வைத்து அறிதுயில் புரியும் நிலையில் வடக்கே நிகழும் திருக்கூத்துள் தூக்கிக் காட்டும், திருவடி யைக் கண்டு கொண்டே களித்திருக்கின்றார். இருப்பினும், சொற்போக்கில், இத்தொடர், கடிக் கமலப் பார்வை வைத்தும் காணாது துயில்கின்றார் என்ற பொருளும் தோன்ற நின்றதறிக.

அத் தகுமாட்சி யுடைய திருவடிக்கமல மலரை அமலம் அறியாத யாம் அறியவல்லேமோ? முடிக்கு (அணியாக்கி) வழி பட்டுய்ய அறிவு வாய்த்தல் இல்லாதவாறு மலசம்பந்தம் தடை யாக்கிற்று. மும்மலச் சார்புடையவர் சமலர் ஆவர். அம்மலம் அற்றவர் அமலர் ஆவர். சமலர்க்குத் திருவடி சூடும் பேறுஎய் தாது. அமலர்க்கே அமலன் அடிக்கமலத்தை முடிக்கக் கூடும். முடிக்க, மலம் மறியாதேம் அறிதுமே எனப்பிரித்துரைக்கினும் பொருள் பொருந்தும். மோனை நயம் அவ்வாற்றிலும் அமையும் ஆயினும், அமலம் அறியாதேம் எனப் பிரித்துரைத்ததே ஆசிரி யர் திருவுள்ளக்கிடையாகும்.

'கடிக் கமலப் பார்வை வைத்தும் கண்ணனார் காணாநின்
அடிக்கமலம் முடிக்கமலம் அறியாதேம் அறிதுமே'

குறிப்புரை :— கடி - மணம். பார்வை - கண். கண்ணனார்- திருமால். அறிதுமே - அறிவேமோ?

(தொடரும்)

உ

திருச்செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு

★

[புதிய மலிவுப் பதிப்பு — 1961]

புதிய பதிப்பு பிரதி ஒன்றின் விலை ரு. 3–50 ந. பை. ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

(முந்தின பதிப்பு பிரதி ஒன்றின் விலை. ரு. 6/–)

(தபால் கட்டணம் வேறு)

768 பக்கங்கள் கொண்டது. (128 + 621 + 19) உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப் பெற்றது.

டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரை, ஆராய்ச்சி, முதலியவற்றுடன் கூடியது.

ஒரே சமயத்தில் 5 பிரதிகளும் அதற்குமேலும் வாங்குபவர்களுக்கும் 20% கழிவு உண்டு.

இதன் விற்பனைத் தொகை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தைச் சாரும்.

கிடைக்குமிடம்:–

ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர்
ஸ்ரீவைகுண்டம் P. O. :: (திருநெல்வேலி மாவட்டம்)

நீதிநெறி விளக்கம் உரைநடை

தருமபுர ஆதீன வித்துவான்,
"திருவண்ணாமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த
சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி"
வயினாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

காப்பு.

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. 1

நம்மவர்களே! தண்ணீரில் உண்டாகின்ற குமிழியைப் போல நம்முடைய இளமைப் பருவம் விரைவில் அழிந்து போகக் கூடியது. நம்மால் நிறைத்து வைக்கப் பெறுகின்ற செல்வம் அத் தண்ணீரில் சுருட்டுதலைச் செய்கின்ற நீண்ட அலைகளைப் போல வந்து வந்து போவது. நமது உடம்பு தண்ணீரில் எழுதப் பெற்ற எழுத்தைப் போன்று நிலை இல்லாதது. எமது தலைவனுகிய கூத்தப்பெருமான் நடம்புரிகின்ற பொன்னம்பலத்தை வாழ்த்தி நீங்கள் வணங்காதிருப்பதற்கு என்ன காரணம்?

நூல்

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 2

இம்மையிற் பெறத்தக்க பேறுகளாகிய அறம், பொருள், இன்பங்களையும், மறுமையிற் பெறத்தக்க பேருகிய வீட்டையும்

வழங்கும். உலகத்தில் நல்ல புகழையும் நிலைநாட்டும். பெரிய கவலை வந்த வேளையிலும் அது நீங்குவதற்குரிய வழியை உணர்த்திக் கை கொடுக்கும். இத்தகைய சிறப்புடையதான கல்வியை விடச் சிற்றுயிர்களாகிய நமக்கு உற்ற துணை வேறு எதுவுமில்லை.

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி—நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது. 3

அறியாமையை நீக்கி அறிவை அகலப் படுத்துகின்ற தாகிய கல்வி, கற்கத் தொடங்குகின்ற பொழுது துன்பத்தைத் தந்து பின்பு இன்பத்தை வழங்குவதாகும். நீண்ட காமம், முன்னர்த் தருகின்ற சிறிய அளவினதாகிய இன்பத்தை விடப் பின்னாலே கொடுக்கின்ற துன்பம் பெரியது. மிகுதியான அணி கலன்களை அணிந்தவளே! இவ்விரண்டில் எது சிறந்தது என்று தெரிந்து கொள்வாயாக.

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு. 4

இவ்வுலகத்திலே வாழுகின்ற சிலருக்குக் கல்வியே கற்புடைய மனைவியாக அமையவும் இனிய செய்யுட்கள் அம்மனைவியின் செல்வப் புதல்வனாக அமையவும் சொல்வளம் சிறந்த செல்வமாகப் பொருந்தவும் மாட்சிமையுடைய அவையினரை மகிழ வைக்கின்ற நற்பேறு அமைவது உண்டு.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு—முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னாகு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. 5

கல்வி எவ்வளவுக்கு மிகுந்ததாயிருந்தாலும் நூல்களில் உள்ள நுட்பங்களையும் பொருட் சிறப்புள்ள பகுதிகளையும்

அறிந்துஅறிவுத் திறமையால் ஆராயும் உணர்வு இல்லையானல் அப்போது அக்கல்வி யாலாகிய பயனும் இல்லையாகும். அங்ஙனம் ஆராய்ந்து உணர்ந்தும் கற்றவற்றைப் பிறர் அறியும் வண்ணம் எடுத்துக் கூறும் சொல்வன்மை இல்லை யானல் என்ன பயன் உண்டாகும்? அச்சொல்வன்மை இருக்கு மாயின் நறுமணத்தை உடைய பொன் மலரைப் போல அது மிகச் சிறந்ததாகும்.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லா
ரவையஞ்சா வாகுலச் சொல்லு—நவையஞ்சி
யீத்துண்ணுர் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 6

கற்றவர்கள் கூடி இருக்கும் அவையைக் கண்டு அஞ்சி உடல் நடுங்குவோரது கல்வியும் அவ்வவைக்கு அஞ்சாது கல்வி யறிவில்லாதவர்கள் பேசும் பொருளற்ற ஆரவார மொழிகளும் செய்தக்க செய்யாமையாகிய குற்றம் வருமென்று அஞ்சிப் பிறருக்குக் கொடுத்து எஞ்சியவற்றை உண்ணுதவர்களது செல்வமும் வறுமையால் வாடுபவர்களது இல்வாழ்க்கையில் அமைந்த நலமும் இருத்தலைக் காட்டிலும் இல்லாதிருப்பதே நல்லதாகும்.

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. 7

கலைமகளது வாழ்க்கை நாவிலே இருக்குமாயினும் வெண் டாமரை மலரில் வீற்றிருப்பவனுகிய பிரமன் நூற் செல்வத்தை வாரி வழங்கும் தண்டமிழ்ப் புலவர்களுக்கு இணையாக மாட்டான். அப்பிரமன் படைக்கின்ற உயிர் நீங்குமானல் ஒரு பெருமையும் இல்லாத உடம்பு, அழிந்து போவதைப் போல எப்போதும் அழியாதவை புகழைப் பெறுவதான புலவர்கள் படைக்கும் செய்யுட்கள் ஆகிய உடம்புகள்.

நெடும்பகற் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி—கடும்பக
லேதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால். 8

பல நாட்கள் வருந்திக்கற்றனவாகி அறிஞர் கூடிய அவையில் சொல்லுதற்குப் பயன்படாமல் பின்னடைந்தோரது அச்சத்தைத் தருகின்ற கல்வியானது எல்லாரும் காணுகின்ற நடுப்பகலில் அயலானுடன் அளவளாவக் கண்ட மனைவியைக் காட்டிலும் பொல்லாததாகும். அம்மனைவியை உதவாதவளென்று அகற்றிவிடலாம். அதுபோல அக்கல்வியைத் தீயதென்று நினைத்து அகற்றிவிட முடியாது. ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வி எழுமைக்கும் அவனைத் தொடர்ந்துவரும் இயல்புடையது.

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள் செய்திடல். 9

முன்னர் மிகவும் வருந்தித் தாம் கற்றுக் கொண்டவற்றை மீண்டும் சிந்தித்தல் முதலியவற்றால் பாதுகாத்துக் கொள்ளாமல் மேலும் வருந்தி வேறு சிலவற்றைக் கற்பதற்கு முற்படுதல் கையிலே இருந்த பெரிய செல்வத்தை மதியாமல் புறத்திலே கொட்டி விட்டு அரிப்பரிப்பதைப்போல எய்ப்பை அடைந்து சிறு பொருள்களைத் தேடுவதனோடு ஒக்கும்.

எனைத்துணைய வேறு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவா—மனைத்தக்காண்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல். 10

வீட்டுக்குரியவளாகிய மனைவி நற்குண நற்செய்கைகளாகிய மாட்சி இல்லாதவளாயின் அவளை மணந்துகொண்ட தலைவன் செய்யும் நல்ல அறங்கள் அனைத்தும் வெளிப்படாதவாறு போல வறுமையாளர்கள் கற்ற கல்வி எவ்வளவு பெருமையுடையதாயினும் தினைஅளவுகூடச் சிறப்புடையதாகமாட்டாது.

இன்சொல்லன் ரூழ்நடைய னுயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா—வென்சொலினுங்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற. 11

இனிய சொல்லை யுடையவனாகவும் பணிந்த நடையை யுடையவனாகவும் இருப்பவன் செல்வமாகிய ஒன்று கல்லாதவனாயின் அவனைப்பற்றி வன் சொற்களைக் கூறுவதற்கன்றிப் பிற சொற்களைக் கூறுவதற்குக் கடல் சூழ்ந்த இந்த நிலவுலகம் வாயைத் திறக்கமாட்டாது. வன்சொல்லைச் சொன்னாலும் நிமிர்ந்த நடையுடன் இருந்தாலும் கையிற் பொருள் உள்ளவனது காலின் கீழே உலகம் ஒதுங்கிவிடும். எனவே உலகம் பித்துடையதன்றி வேறு எதனையும் உடையதென்று சொல்ல முடியாது.

இவறன்மை கண்டு முடையாரை யாருங்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப—பெரிதுந்தா
முற்பக லேலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று. 12

செல்வம் உடையவர்களை அவர்களுக்கு உலோபத் தன்மையிருப்பது கண்டுங்கூட எல்லோரும் அவர்களிடத்தில் தாமே வலியச் சென்று தமது குறைகளுக்காக இரந்து அவர்கள் இடும் சிறிய ஏவல்களையும் செய்வார்கள். முற்பிறவிகளில் செல்வம் பெறுதற்குரிய தவத்தைச் செய்யாதவர்கள் அதனைச் செய்து செல்வராய் வாழ்பவர்களைப் பின்பற்றி நிற்றல் கல்வியறிவின் பயனே அல்லவா? இங்ஙனமிருக்கவும் இதனைக் கல்லாமையின் பயன் என்று கூறுதல் பொருத்தமற்றதாகும்.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
யழகுக் கழகு செய்வார். 13

நூல்களைக் கற்றவர்களுக்கு அக்கல்வி நலமாகிய அழகே ஆபரணங்களாய் இருக்கும்; அது அல்லாமல் வேறு ஒரு ஆபரணமும் அவர்களுக்கு வேண்டப் பெறுவதில்லை. முழுவதும் நன்மணிகளை வைத்து இழைக்கப் பெற்ற ஆபரணத்துக்கு ஒரு

ஆபரணத்தை யாரும் வேண்டமாட்டார்கள். அழகுக்கு அழகு செய்பவர்களாக இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்?

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். 14

அனைத்தையும் உணர்ந்தவர்களாக இந்த உலகத்தில் யாரும் இருப்பதில்லை. எல்லாவற்றையும் கற்றுவிட்டோமென்று செருக்கடையாதீர்கள். பெரிய கல்லும் சிறிய உளியினால் தகர்ந்து தூளாகிவிடும். நிறைந்த ஆபரணங்களை அணிந்தவளே! கொல்லனது உலைக்களத்திலே உள்ள சம்மட்டியினால் அந்தக்கல் தகர மாட்டாது.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று. 15

செல்வப் பேற்றில் தம்மைவிடத் தாழ்ந்திருப்பவர்களைப் பார்த்துத் தமது செல்வம் மிகவும் பெரியதென்று மனமகிழ்ச்சியை அடைவிர்களாக. தம்மைவிட அதிகமாகப் படித்தவர்களைப் பார்த்து நாம் படித்ததெல்லாம் இவர் படிப்பை நோக்க எவ்வளவு சிறியது என்று எண்ணி நெஞ்சு அழிவீர்களாக.

கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு—மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின். 16

வறுமையாளர்கள் தமது குறைகளை எடுத்துச் சொல்லி யாசித்துப் புரவலர் முன்னே நிற்பதைப் போல் தாமும் தலைவணங்கித் தாழ்மையுடையவர்களாய் இருக்கும் பொழுதுதான் கல்வியுடைமையும் பொருளுடைமையுமாகிய இரண்டு செல்வங்களும் செல்வமென்று சொல்லத் தக்கனவாயிருக்கும்.

(தொடரும்)

திருவுந்தியார்-விளக்கவுரை

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

[மலர் 13. இதழ் 10-ன் தொடர்ச்சி]

இரவு பகலில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற 20

(வி - ரை) உயிர் ஆணவத்தோடு கூடி வாழும் நிலையை இரவு என்றும், மாயையுடன் கூடிவாழும் நிலையைப்பகல் என்றும், கூறுப. இவ்விரு நிலையையும் விடுத்துப் பேரின்ப வடிவினனாகிய இறைவனோடு உயிர்கள் கூடிவாழ்தலையே ஈண்டு 'இன்ப வெளியூடு விரவுதல்' என்று கூறப்படுகின்றது. இங்ஙனம் உயிர்கள் இன்பவெளியில் கலந்து நிற்கும் பொழுது, உலகியற் பொருள்களிற் கருத்தினைச் செலுத்தி, அவ்வின்பத்தினைப் பின்னர் அநுபவித்துக் கொள்வோம் என்றிராமல், இடைவிடாது அவ்வின்ப அநுபவத்திலேயே கருத்தினைச் செலுத்த வேண்டும் என்பதாம்.

உயிர்களால் அளவின்றி யீட்டப்பட்ட வினைகளை அநுபவித்துத் தீர்ப்பதற்கே கருவி கரணங்களோடு கூடிய உடல் தரப்படுகின்றது. அங்ஙனம் அவ்வினைப்பயன்களை அநுபவித்துத் தீர்த்தபின், இறையருளோடு கூடும் இன்ப அநுபவம் கிட்டுகின்றது. அத்தகைய பேரின்பத்தைத் தலைப்பட்டும், உலகியற் பொருள்களில் கருத்தைச் செலுத்தினால், அவ்வின்ப அனுபவம் தவறுவதோடு, மீண்டும் அது கிடைக்காது போய்விடும் என்பதாம்.

இவ்வின்ப வெளியில் விரவுதற்கு உயிர்கள் அனைத்தும் விரையவேண்டும் என்பதையே திருவாசகத்தில் 'புணர்ச்சிப் பத்து' என்னும் பகுதியில் மாணிக்கவாசகர் மிகவும் அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே."

இப்பகுதி திருவருளின்பம் எத்தகையது என்பதையும், அதனை அடைதற்கு அடிகள் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் நன்கு விளக்குகின்றது.

இரவு, பகல், இன்பம், என்னும் முத்திறத்திலும் உயிர்கள் பெறும் அநுபவத்தையும், அதனைத் திருவருள் இயைவிக்குமாற்றையும் தாயுமானுர் மிக அழகாக விளக்குகின்றார். அப்பாடல் வருமாறு:-

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட்(டு) அல்லலாம்
காப்பிட்(டு) அதற்கி சைந்த
பேரிட்டு மெய்யென்று பேசும்பாழ் பொய்யுடல்
பெலக்கவினை அமுதம் ஊட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர(வு) உறுகின்ற
பெரியவினை யாட்ட மைத்திட்(டு)
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்(டு)
இடருற வுறுக்கி யிடர்தீர்த்(து)
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில்கொள்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

சொல்லும் பொருள்களும் சொல்லா தனவு(ம்)அங்
கல்லனுய் ஆனுன்என் றுந்நீபற
அம்பிகை பாகன்என் றுந்தீபற. 21

(வி-ரை) சொல்லத்தக்க உள் பொருள்களும், சொல்லற் கியலாத இல்பொருள்களும், இவையிரண்டும் அல்லாத பொருளும் ஆய் நிற்பது எது? அதுவே பரம்பொருள் ஆகும். அத்தகைய பரம்பொருள் நம்மனோர் பொருட்டு எளிவந்து அருள் செய்யுமோ எனில் கருணையே உருவாகக் கொண்டிருக்கும் சத்தியைத்தன் இடது பாகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் சீலம் உடையது ஆதலால் எளிவந்து அருள் செய்யும் என்பதாம்.

இறைவன் மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனுய் இருப்பினும், அடியார்கள் சிந்தனையுள் தேனூறி நின்று, அவர்களுக்கு அருள வல்ல கருணைப் பெருக்கும் உடையன் என்பதாம்.

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவ தாற்ற(ல்)என் றுந்தீபற
அல்லாத(து) அல்லவென் றுந்தீபற. 22

(வி-ரை) வெளிவந்து இயங்கும் மூச்சுக் காற்றினைக் குருவருளால் உள்ளே சுவறுமாறு செய்யின் மன ஒருமைப்பாடு ஏற்படும். இதுவே ஆற்றல் எனப்படும். இத்தகைய ஆற்றலாலேயே இறைவனைக் கண்டு மகிழ இயலும். இதுவல்லாத பிற நெறிகளால் காண்டற் கியலாது என்பதாம்.

இறைவனை நினைத்தற்கு ‘ஒருநெறிய மனமும்’ அவனை வழிபடும் பொழுது ‘ஒன்றியிருந்து நினைத்’தலும் வேண்டும். இதற்குக் காற்றினை மாற்றிக் கணக்கறியும் இவ்வநுபவம் இன்றியமையாது வேண்டும். இது குருவருளால் பெறத்தக்கதாம்.

கள்ளரோ(டு) இல்லம் உடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடு(ம்) எளிதாமென் றுந்தீபற. 23

(வி-ரை) களவு காண்பான் ஒருவன், மிகுந்த பொருளுடையவன் மாட்டுச் சென்ருல், அவனது பொருளைக் கைப்பற்ற

அவனை மந்திரத்தாலும், மருந்தினாலும் தன் வசப்படுத்திய பின்பே களவாடுவன். அதுபோல இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய இறைவன், இயல்பாகவே பாசங்களையுடைய உயிர்களுக்குக் காண்டற் கரியனாய் (கள்வனாய்) இருப்பன். பின் இருவினை யொப்பும் மலபரிபாகமும் வந்தவிடத்து உடல் என்னும் வீட்டினைப் பெற்றிருக்கும் உயிர்களைத் திருவைந்தெழுத்து என்னும் மந்திரத்தாலும், திருநீறு என்னும் மருந்தினாலும் தன்வயமாகச் செய்து, அவ்வுயிர்களினிடத்து நின்ற மலங்களை இறைவன் என்னும் கள்வன் கவர்ந்து விடுவன். அப்பொழுது அவ்வுயிர்களுக்குச் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய வீடும் எளிதில் கிடைக்கும் என்பதாம்.

உயிர்களுக்கு இருவினையொப்பு வரும் வரையிலும் இறைவன் மறைந்து நின்று அருள் செய்தலின், அவ்விறைவனைக் கள்ளர் என்றார். இறைவனைக் கள்ளன் 'என்னாது கள்ளர்' என்றது அத்தொழிலின் அருமையைக் குறிக்கவேயாம். உலகத்துக் கள்வர் தன்னலத்திற்காகப் பிறர் பொருளைக் கவர்வர். இறைவனோ உயிர்களின் நலத்திற்காக இந்நிலையை மேற்கொள்கின்றான். உலகத்துக் கள்வர் தமது இன்றியமையாமையின் பொருட்டுப் பிறருக்கு இன்றியமையா திருக்கும் பொருள்களைக் கவர்வர். இறைவனோ தனக்கும், உயிர்களுக்கும் வேண்டாத மலங்களினின்றும் நீக்க இத்தொழிலை மேற்கொள்கின்றான். உலகத்துக் கள்வரை நாமே வருந்தித் தேடிக் கண்டாலன்றி, அவர்களே முந்துற வருவதில்லை. ஆனால் இறைவனோ அன்பால் நினைவார்களது உள்ளக் கமலத்தின் கண்ணே அவர்கள் நினைந்த வடிவோடு விரைந்து வரும் இயல்பினன். இத்தகைய அருமையும் பெருமையும் உளவாதலை நினைந்தே இறைவனைக் 'கள்ளர்' என்றார்.

இல்லம் உடையார் – உயிர்கள்.

எட்டுக் கோண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்றார்
விட்டார் உலகம்என் றுந்தீபற
வீடே வீடாகும்என் றுந்தீபற.

(வி-ரை) விண், மண், நீர், தீ, வளி, மதி, கதிரவன், உயிர் என்ற எட்டினையுமே திருமேனியாகக் கொண்டிருக்கும் இறைவனை, இடைவிடாது நினைந்து கொண்டே யிருப்போர்களுக்கு உலகியற் சூழல் தோன்றாது. உலகியல் சூழலாவதுதான் அல்லாத தனைத்தன்னுடையது என்னும், தன்னுடையது அல்லாததனைத் தன்னுடையது என்றும் கருதும் கருத்தாகும். இவ்விரண்டனையும் விட்டு விட்டால் அதுவே வீடாகும் என்பதாகும்.

யான் எனது என்ற அற்ற இடமே திருவடியா என்னும் குமரகுருபரரின் வாக்கும் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. திருநாவுக்கரசு சுவாமிகள் எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே நின்றவர் என்பதை "நாயகன் சேவடி தைவரும் சிந்தையும்" என்னும் வாக்கால் நன்கறியலாம். இத்தகைய நற்சிந்தையினால் தான் 'விட்டார் உலகம்' என்பதற்கேற்ப அவர்தம் வாழ்வு விளங்கலாயிற்று.

(வளரும்)

இராகம் : அசாவேரி தாளம் : ஆதி

பல்லவி

அபயம் கொடுத்து என்னை ஆதரி—அம்பா
சமயம் இது அல்லவோ சங்கரீ (அபயம்)

அனுபல்லவி

அனவரதமும் உன்னைத்துதித்திட எந்நாளும்
மனத்தினில் கொண்டு மறவாமல் பாடிட (அபயம்)

சரணங்கள்

(1) திங்களும் கங்கையும் திகழும் சடைதரித்த
எங்கெங்குமாகவே மிருந்துபுரம் எரித்த
சங்கர சாம்ப சதாசிவன் தேவியே
துங்கமுறும் உன் அடிபணிந் தேனே (அபயம்)

(2) நீதிநெறியுமில்லா பேதையுமாகி
போதித்தருள நாதி எதுவுமேயின்றி
நீர்க்குமிழிபோன்ற வாழ்வையே நம்பி
மூர்க்கனாய் வாழ்வது நன்றோ அருள்புரி (அபயம்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

"வினைப்பயன்"

திரு. சி. எம். குருசாமி அவர்கள்,
ஆசிரியர், மதுரை.

"செய்த தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்தவருமோ இருநிதியம்?" என்ற சான்றோர் வாக்கின்படி, மண்ணுலகில் பிறந்த நாம் அடையுந் துன்பங்களை எண்ணி யெண்ணி நம்மை நாமே நொந்து கொள்ளாது தெய்வத்தைக் குறைகூறுதல் எய்தவனிருக்க அம்பை நோதலுக் கொப்பாகும். ஏன்றவினை, ஏறுவினை, எஞ்சுவினை (பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம்) என்ற இம்மூன்று வினைகளும் உலகில் பிறந்த நம்மைச் சார்ந்தன. நாமெல்லோரும் இவ்வுலகிற்கு வருவதன் முன்னமே நாம் செய்த நல்வினை, தீவினைக்கேற்ப இன்பதுன்பங்கள் வகுக்கப்பட்டே வந்திருக்கிறோம் என்பதை நாம் முதற்கண் மறத்தல் கூடாது. ஏன்ற (பிராரத்தம்) வினையானது அனுபவித்தாலன்றித் தீராது. தேவர்களாயினும், அடியார்களாயினும் உலகில் தோன்றி விட்டால் அதனையடுத்துப் பிராரத்த வினையை அனுபவித்தே யாதல் வேண்டும். ஒரு மாணவன் தன் ஆசிரியரைப் பார்த்துக் கேள்வி கேட்கும் பாணியில் ஆசிரியர் உபமான உவமேயத்தோடு பின்வரும் செய்யுளில் பதிலிறுக்கிறார்.

பாரினிலின்ப துன்பம் படர விதித்தானே
வாரிசத்தான் யாதுகவி வல்லவா—யான்சொலக்கேள்
பல்லாவுள் கன்றுதன் ஆய்ப்பார்த் தணுகல்போல்
எல்லாருஞ் செய்வினையா லே. (பல்சுவைப் பாடல் 3)

பல பசுக்கள் கட்டப்பட்டுள்ள ஒரு தொழுவத்தில் இனந் தெரியாத கன்றொன்றைக் கொண்டு விடுத்தோமானால் அக்கன்று ஓடிச் சென்று தன் தாயை இனங்கண்டு அதன் மடியில் பால் சுவைப்பதைக் காணலாம். நமக்குத் தெரியாது.

ஆனால் கன்று எளிதில் அடையாளங் கண்டு சென்றடைகிறது. அதுபோல அவரவர்கள் செய்த நல்வினை, தீவினைக் கேற்ற பயன்கள், அவர்களை நிச்சயம் வந்தடைகின்றன. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோர் இறைவனது ஆணையால் உலகில் அவதாரஞ் செய்தார்களாயினும் போர்த்துக்கொண்டது மானுடச் சட்டைதானே? அதைத் தொடர்ந்த பிராரத்த கர்மத்தை அனுபவித்தேயாக வேண்டுமன்றோ? அப்பர் சமணத்தைப் பழித்து சைவமதம் புகுந்து கொண்டாரென சமணர்களொன்றுகூடி அப்பரைக்கல்லோடு பிணைத்துக் கடலிற் கிடத்தியும், சுண்ணும்பு நீற்றறையிலடைத்தும், யானையால் இடறுவித்தும் இவை போன்றதுமான துன்பங்களுக்குள்ளாக்கினார்கள். சுந்தரர் கண்பார்வையிழந்து ஊன்றுகோல் பெற்றுப்பின் இறைவனருளால் கண்ணொளி பெற்றதும் மாணிக்கவாசகர் பாண்டியனை ஏமாற்றிய குற்றத்திற்காக, ஆற்றுச் சுடுமணலில் நிறுத்தப்பெற்றுச் சவுக்கினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டதுமான செய்திகளை வரலாறு கூறுதலான் நாம் அறிகிறோம்.

கற்பகமரம் என்ற தெய்வமரம் ஒன்றுண்டு. அது தன்னை வந்தடைவோர்க்கு வேண்டுவதை வேண்டியவாறு கொடுத்துதவும் இயல்பினைப் பெற்றது. இதனைக் கேள்வியுற்று ஒருவன் அதனைச் சென்றடைந்து, உண்ணுதற்கு அறுசுவை உணவு வேண்டி நின்றான். ஆனால் அவனுக்குக் கிடைத்ததோ காஞ்சிரங்காய் அதாவது (எட்டிக்காய்). கசப்பான எட்டிக்காயை கொடுத்தது கற்பகமரத்தினது குற்றமா? இல்லை அதற்கு யாரிடத்திலும் பாரபட்சமா? அல்ல. முன் செய்த வினைக்குத் தக்கவாறு அது பயன் தந்துதவுகிறது.

எழுதியவா றேகாண் யிறங்கும் மடநெஞ்சே!
கருதிய வாருமோ கன்மம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தார்க்குங் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை. (நீதிசாரம்)

இன்பதுன்பங்களுக்குக் காரணமாக நாமேயிருக்கத் தெய்வத்தை நோதல் அறிவுடைமையாகாது. இரட்டைப் புலவர்கள் ஒரு சமயம் அளவில்லாத் துன்பமடைந்தார்கள். அதனால் மனம் நொந்து, இறைவனை நோக்கி,

கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள தெய்வங்காள்!
கூட்டோடே யெங்கு குடிபோனீர்?–பாட்டாய்கேள்
செல்காலம் எல்லாம் 'செலுத்திஞேம் அல்காலம்
கல்லாஞேம்! செம்பாஞேம் காண்.

அல்காலம், செல்காலமென இரண்டுண்டு. இதனேயே தெய்வப் புலவராம் திருவள்ளுவரும் ஆகூழ், போகூழ் என ஊழ் பற்றிய அதிகாரத்திற் கூறியுள்ளார். செல்காலமிருக்கும்போது நாம் எது செய்தாலும் அது நமக்கு இன்பத்தைச் செய்யும். அல்காலமுள்ள ஒருவர் நல்லன செய்தாலும் தீயனவாக முடியும். இதை நாம் கண் கூடாகக் காண்கின்ருேம்.

ஆகுஊழால் தோன்றும் அசைவுஇன்மை கைப்பொருள்
போகுஊழால் தோன்றும் மடி. (குறள்)

தவத்திற்கு இலக்கணமாவது, சென்றதைக் கருதாது நாளைச் சேர்வதை நினையாது கண்முன் வருவதைப்பொறுமையோடு அனுபவித்தல், பிறவுயிர்க்கு எஞ்ஞான்றும் துன்பஞ் செய்யாமையேயாகும். இதனை வள்ளுவர்,

உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. (குறள்)

ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு உயர்செல்வமெலாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக் குபதேசமிதே. (பட்டினத்தடிகள்)

இயன்ற போதெல்லாம் அற்ருர்க் கொன்றளித்து நல்லாரிணக்கமும், அரன் பூசை நேசமுங் கொண்டு, இடுக்கட்படினும் இழிவந்த செய்யாது, பொறுமையாய் பிராரத்தத்தைப் புசித்து மறுமையில் தீவினையணுகாது நற்ருெண்டு செய்தற்கு இம்மையிலே நல்லறங்களைச் செய்து இனிது வாழ்தலே சால அறிவுடைமையாகும்.

தஞ்சாவூர்
இராச ராசேச்சரக் கல்வெட்டு வரலாறு

வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
திருவையாறு.

தஞ்சாவூரின் தொன்மை

தஞ்சாவூர் ஜில்லாவில் தஞ்சாவூர் என்னும் பெயருள்ள ஊர்கள் இரண்டு இருக்கின்றன. அவைகளுள் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல்நாட்டுத் தஞ்சாவூர் என்பது ஒன்று. பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் என்பது மற்றொன்று. இவைகளுள் முன்னது அறு பான்மும்மை நாயன்மார்களில் ஒருவராகிய செருத்துணைநாயனார் பிறந்த பதி. அது நன்னிலந் தாலூகாவில் திருமருகலுக்கு அருகில் உள்ளது. பின்னதுதான் இராச ராசேச்சரம் நிலை பெற்றுள்ள ஊர். இத் தஞ்சாவூர் தேவார வைப்புத்தலங்களுள் ஒன்றாகும். இதை அப்பர் பெருமான் திருவீழிமிழலைத் திருத் தாண்டகம் எட்டாம் பாசுரத்தில் "தஞ்சைத் தளிக்குளத்தார்" என்று வைத்துப் பாடியுள்ளார். இத் தஞ்சைத் தளிக்குளம் தஞ்சை இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள கோயிலுக்கு அண் மையில் உள்ள சிவகங்கைக் குளத்தில் இருக்கின்றது. அதில் தண்ணீர் குறைந்துள்ள காலங்களில் சிவலிங்கம், நந்தி இவை களை இன்றும் காணலாம். எனவே தஞ்சைத் தளிக்குளத்தை அப்பர் பெருமான் பாடியிருப்பதால் அவரது காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்தது இத் தஞ்சாவூர். இது அப்பர் பெருமான் காலத்தி லேயே தஞ்சை என்று மரூஉ மொழியாக வந்துள்ளதும் ஈண்டு அறிதற்குரியது.

அக்டோபர் 1962 "திருக்கோயில்" இதழிலுள்ள இக் கல்வெட்டு வரலாறு அறநிலைய பாதுகாப்புத் துறை ஆணையாளர் அனுமதியுடன் வெளியிடப் பெறுகிறது.

தஞ்சையைப் பற்றிய பிற குறிப்பு

பிற்காலச் சோழமன்னர்களில் முதல்வனுகிய விசயாலய சோழன் தஞ்சாவூரைப் பிடித்துக்கொண்டு அதைத் தலை நகராக்கிக்கொண்டான். இச்செய்தி திருவாலங்காட்டுச் செப் பேட்டிலும் (S. I. I. Vol. III No. 205) தென்னுர்க்காடு ஜில்லா திருக்கோவலூர்த் தாலூகா வீரசோழபுரத்துக் கல்வெட்டிலும் குறிக்கப் பெற்றுள்ளது. இத்தஞ்சையே விசயாலயன் காலம் முதல், முதலாம் இராசராசன் காலம்முடிய, சோழர்களுக்குத் தலைநகராய் விளங்கியிருந்தது. "உடையார்ஸ்ரீ ராஜராஜதேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால் இருமடி சோழனின் கீழைத்திரு மஞ்சனசாலை தானஞ் செய்தருளாவிருந்து"—என்னும் கல் வெட்டுப்பகுதி தஞ்சாவூரில் சோழர்களுக்கு அரண்மனை இருந் தது என்பதற்கு ஆதாரமாகும்.

இராசராசேச்சரம் என்ற தொடருக்குப் பொருள்

இத்தொடர் இராசராச சோழனுல் கட்டப்பெற்ற கோயில் என்று பொருள்படும். ஈச்சரம்—கோயில். இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அனைத்தும் ராஜராஜீஸ்வரம் என்றே இக்கோயிலைக் குறிக்கின்றன. இலக்கண விதிப்படி அது தவறுடைய தாகும். ராஜராஜேஸ்வரம் என்பதே திருத்தமுடையதாகும்.

இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள இடம்

'பாண்டிகுலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீராஜ ராஜீஸ்வரம் உடையார்க்கு நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார் குடுத்தனவும் ஸ்ரீ விமானத்திலே கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிந் தருள வெட்டின" என்னும் முதலாம் இராசராச சோழனின் ஆட்சியாண்டு 26, நாள் இருபதில் வெட்டப்பட்ட கல்வெட்டுப் பகுதி, தஞ்சை இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள இடம் பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூரில் அமைந்துள்ளதைப் புலப்படுத்தும். பாண்டிகுலாசனி என்பது முதலாம் இராசராச சோழனுடைய விருதுப்பெயர்களில் ஒன்று,

இதற்குப் பாண்டியர் குலத்துக்கு இடியை ஒத்தவன் என்பது பொருள். இப்பெயரே இவ்வள நாட்டுக்கு வைக்கப்பட்டதாகும். இப்பெயர் பிற்பட்ட காலத்தில் பாண்டிகுலபதி வளநாடு என்று வழங்கப்பெற்றுள்ளது.

பாண்டிகுலாசனி வளநாடு

இப்பாண்டிகுலாசனி வளநாடு, ஆர்க்காட்டுக்கூற்றம், இடையாற்றுநாடு, எயிநாடு, எறையூர் நாடு, கிளியூர்நாடு, கீழ்செங்கிளி நாடு, சுத்தமல்லி வளநாடு, தஞ்சாவூர்க்கூற்றம், பனங்காடுநாடு, புறக்கிளிநாடு, மீசெங்கிளிநாடு, மீய்வாரிநாடு, வடகவிரைநாடு, வடசிறுவாயில்நாடு, விளாநாடு, முதலான பதினேழு பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது.

தஞ்சாவூர்க் கூற்றம்

இது தஞ்சாவூர், கருந்திட்டைக்குடி முதலான ஊர்கள் இக் கூற்றத்தில் அடங்கியிருந்த ஊர்களுள் சிலவென்று கல்வெட் டுக்கள் அறிவிக்கின்றன. கூற்றம் என்பது இருநாடுகளுக்கு இடைப்பட்ட சிறுபிரிவாகும்.

இராசராசேச்சரம் கட்டி முடிவுபெற்ற காலம்

முதலாம் இராசராச சோழன் அவனது ஆட்சியாண்டு இருபத்தைந்து நாள் இருநூற்று எழுபத்தைந்தில் ஸ்ரீ ராச ராசேச்சர முடையார் ஸ்ரீவிமானத்துச் செம்பின் ஸ்தூபித் தறியில் வைக்கச் செப்புக்குடம் ஒன்றைக் கொடுத்த செய்தி அவன் கல்வெட்டுப் பகுதி உணர்த்துகின்றது (S. I. I. Vol. II Part I Page 3) எனவே கோயில் கட்டி முடிவுபெற்ற காலம் கி. பி. 1010 அதாவது இற்றைக்கு 972 ஆண்டுகளுக்கு முன்பு ஆகும்.

இராசராசேச்சரத்துக் கருவறையில் ஏழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர்

இக்கோயில் கருவறையில் எழுந்தருளியிருக்கும் இறைவர், சோழமன்னர்களின் கல்வெட்டுக்களில் இராச ராசேச்சரமுடையார், இராச ராசேச்சரமுடைய பரமசுவாமி, எனக் குறிக்கப்பெற்றுள்ளனர்.

மல்லப்ப நாயக்கர் கல்வெட்டில், தஞ்சாவூர் பெரிய உடைய நாயனர் என்னும் பெயர் காணப்படுகிறது. இதுவே இக்காலம் தஞ்சைப் பெருவுடையார் என்று வழங்கப்பெறுகின்றது.

இக்கோயிலில் முதலாம் இராசராச சோழன் எழுந்தருளு வித்தனவும் கொடுத்தனவுமாகிய வேறு திருமேனிகள்

முதலாம் இராசராச சோழன், இக்கோயிலில் தட்சிண மேரு விடங்கர், மகாமேருவிடங்கர், சண்டேஸ்வரப்பிரசாத தேவர், இவர் பிராட்டியார் உமாபரமேஸ்வரியார், சண்டேஸ்வரரின் தந்தையார் விழுந்து கிடந்தாராய் உள்ளவர், பிரசாதம் பெறு கின்ருராகக் கனமாகச் செய்த சண்டேஸ்வரர், மகாதேவர், பஞ்சதேக மூர்த்திகள் முதலான வேறு திருமேனிகளை எழுந் தருளுவித்துள்ளான். ஆடவல்லான் என்னும் கல்லால் எண் ணூற்று இருபத்தொன்பது கழஞ்சே முக்காலே மூன்றுமஞ்சாடி நிறையுள்ள ஸ்ரீபலி எழுந்தருளும் பொன்னின் கொள்கை தேவர் ஒருவரையும், பாதாதி கேசாந்தம் மூவிரலே மூன்றுதோரை உயரமும் நான்கு திருக்கைகளிலும் பிடித்தருளிய சூலமும், கபாலமும், பாசமும், தமருகமும் வெள்ளியின் பாதபீடமும் உள் பட நிறை எழுபத்திரு கழஞ்சரையுள்ள பொன்னின் க்ஷேத்திர பாலதேவர் ஒருவரையும் கொடுத்துள்ளான்.

(தொடரும்)

தமிழ் தெலுங்கு உறவு

திரு. ஸி. ராதாக்ருஷ்ணசர்மா அவர்கள்

மொழித்தத்துவம் இலக்கண மரபுகள் முதலியவற்றைக் கொண்டு ஒப்பு நோக்கும் பொழுது, தமிழும் தெலுங்கும் நெருங்கிய தொடர்பு உள்ள மொழிகள் என்பது புலப்படும். தமிழ்ச் சொற்கள் எத்தனையோ தெலுங்குக் காப்பியங்களில் இடம் பெற்றுள்ளன. பண்டையத் தெலுங்கு இலக்கியத்தையும், வரலாற்றுக் குறிப்புகளையும் ஆராய்ந்தால் இந்த உண்மை நன்கு தெளிவாகும். வடமொழி இலக்கியத்தைப் பின்பற்றித் தெலுங்கு இலக்கியம் வளர்ந்தாலும், தெலுங்கு மொழியும் திராவிட மொழிக் குடும்பத்தை சேர்ந்தது. ஆனால் சிலதெலுங்கு அறிஞர்கள் இந்தக் கருத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை.

பழந்தமிழர் தெலுங்கை வடுகு என்னும் பெயரால் அழைத்தனர். சங்கஇலக்கியத்தில் சில தெலுங்குச் சிற்றரசர்களைக் குறித்துச் சில விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. பல்லவர்கள் அரசு புரிந்த காலத்தில் கூட பக்தி இயக்கத்தினால் தெலுங்கரும் தமிழரும் நண்பர்களாக வாழ்ந்து வந்தது தெரியவரும்.

ஆயினும் பிற்காலச் சோழர் ஆட்சியில்தான் தெலுங்கு தமிழ் மொழிகள் பேசுவோரிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது என்று கூறலாம். அந்த நாளில் தெலுங்கு நாட்டிற்கு ‘வேங்கி சீமா’ என்றும் பெயர் இருந்தது. வேங்கியை அப்போது கிழக்கு சாளுக்கியர்கள் ஆண்டு வந்தனர். சோழரும் சாளுக்கியரும் நண்பர்களாக இருந்ததோடு அன்றி, தம்முள் திருமண உறவும் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ராஜராஜ சோழனின் புதல்வியான குந்தவியை வேங்கி மன்னரான விமலாதித்தியர் மணந்து கொண்டார். விமலாதித்தியரின்

மேலே காணும் கட்டுரை மதருஸ் அகில இந்தியா வானொலி நிலையத்தாரின் அன்பனுமதி பெற்று வெளியிடப்பட்டது.

புதல்வரான ராஜேந்திரர், முதல் ராஜேந்திர சோழனின் புதல்வி அம்மங்கதேவியைத் திருமணம்செய்து கொண்டார். சிலஆண்டு களுக்குப் பின்னர் வேங்கியைச் சேர்ந்த குலோத்துங்கர் சோழ நாட்டிற்கே அரசராய் குலோத்துங்க சோழராகிவிட்டார். இந்தத்திருமணங்களை அடுத்து எத்தனையோ தமிழ்க் குடும் பங்கள் தெலுங்கு நாட்டில், சிறப்பாக வேங்கிச் சீமையில் அதா வது கோதாவிரிப் பகுதியில் குடியேறின.

சோழர்களுக்குப் பின்னர் விஜயநகரப் பேரரசர்களின் காலத்தில் மறுபடியும் தெலுங்கர் தமிழர்கள் இடையே இருந்த தொடர்பு வலிமை பெற்றது. இதன் பயனாக, பல தெலுங்குக் குடும்பங்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் குடியேறின. இவ்வாறு இரண்டு மொழிகளுக்கும் நீண்ட காலத் தொடர்பு இருந்திருப்பதால், இவ்விரண்டு மொழிகளிலும் பொதுவான அம்சங்கள் காணப்படுவது இயற்கையே. இவ்விரண்டு மொழிச் சொற்களும், பழமொழிகளும் இலக்கியங்களும் ஒன்றுள் ஒன்று கலந்திருப்பதிலும் வியப்பில்லை.

தெலுங்கு இலக்கியத்தில் எழுந்த முதல் நூலான மகா பாரதத்தை இயற்றியவர் நன்னயபட்டர் என்னும் பெரும்புலவர். வடமொழியிலும் தமிழ், கன்னட மொழிகளிலும் இவர் புலமை வாய்ந்தவராகத் தெரிகின்றது. இவரது நடையில் வடமொழிச் சொற்கள், நீண்டவடமொழி ஸமாசங்கள் இருந்தாலும், பல இடங்களில் திராவிடமொழிச் சொற்கள் அழகாக அமைந்து இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒரு செய்யுள்,

பையன் ஒருவன் கோல்பிடித்த கையுடன் வந்து
யான் அரக்கனைக் கிட்டிக் கொன்று
வருவேன், நீங்கள் அழவேண்டாம் என்று
ஆறுதல் கூறினான், மழலைக் குறுமொழியில்.

இந்த பொருள் கொண்ட தெலுங்குச் செய்யுளில் கோல, யேனு கிட்டி முதலான திராவிட மொழிச் சொற்கள் இருக்கின்றன. தெலுங்கில் கோல என்றுஇருந்தாலும்,தமிழ் கன்னட மலையாளங் களில் கோல் என்றே இருக்கின்றது. அதுபோலவே யேனுகிட்டி என்னும் சொற்கள் சிற்சில மாறுதல்களுடன் தமிழ் முதலிய மொழிகளிலும் வழங்குகின்றன. இப்படிப் பார்த்துக் கொண்டே

போனால் நன்னயனது நடையில் தமிழ் முதலிய பிற திராவிட மொழிச் சொற்கள் பல காணப்படும். பழந் தெலுங்குக் காப்பியங்களிலும், கல்வெட்டுக்களிலும் கட்டாயம், மலர், தயிர், நாய் முதலிய சொற்கள் காணப்படுகின்றன. ஆனால் இவை இன்று வழக்கிலிருந்து விலகியுள்ளன.

தமிழ்ச் சொற்களோடு ஒருசில தமிழ் இலக்கிய மரபுகளையும், நன்னயரது நூலில் நாம் காணலாம். ஆசு, பந்த, கர்ப்ப, சித்திர, என கவிதை நான்கு வகைப்படும் என்று வடமொழி நூல்கள் கூறுகின்றன. ஆனால் தமிழில் கவிஞர்களை ஆசு, மதுர, சித்திர, விஸ்தார என்று அழைப்பது வழக்கம். அதே போல, நன்னயர் கவிதையை ஆசு, மதுர, சித்திர, விஸ்தார என்று வகுத்துள்ளார். அவரைப் பின்பற்றி மற்ற தெலுங்குப் புலவர்களும் கவிதையை இதே நான்கு வகையாகப் பிரித்தனர்.

சைவ வைணவக் கவிஞர்களின் காப்பியங்களில் தமிழ் இலக்கிய பிரபாவம் புலப்படுகின்றது. நாயன்மார்களின் திவ்யக் கதைகளைக் கூறும் பெரிய புராணம் தெலுங்கு சைவப் புலவர்களை மிகவும் கவர்ந்தது. தெலுங்கு கன்னட இலக்கியங்களில் இடம் பெற்ற பால குரிகி சோமநாதர் என்பவர் தமது பஸவ புராணத்தில் பெரிய புராணத்தில் காணப்படும் சில கதைகளைக் கூறியுள்ளார். சோமநாதர் தம் விருஷாதிப சதகத்தில் ஒரு தமிழ்ச் செய்யுளையும் எழுதியுள்ளார்.

மகாகவி தூர்ஜடி என்னும் புலவர் தமது 'காளஹஸ்தீசுவர மாகாத்மியம்' என்னும் காப்பியத்தில் மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை, அங்கயற்கண்ணி போன்ற பல தமிழ்த் தொடர்களைக் கையாண்டார். சங்க காலத்துப் புலவராகிய நக்கீரரைப் பற்றியும் அழகாக அவர் சொல்லியிருப்பதையும் அந்தக் காவியத்தில் காணலாம்.

தெலுங்கிலிருந்து தமிழும் பல சொற்களை எடுத்துக்கொண்டது. சென்னைப் பல்கலைக்கழகம் புதுப்பித்த தமிழ் லெக்சிகனிலிருந்து நானூறுக்கு மேற்பட்ட தெலுங்குச் சொற்கள் தமிழில் சேர்ந்ததாகத் தெரிய வருகின்றது. இன்றைக்கும் கொஞ்சம், கோஸரம்போன்ற சொற்கள்பேசும் தமிழில் காணப்படுகின்றன.

யாப்பருங்கலக் காரிகைக்கு உரை எழுதிய குணசாகரர் தம் நூலில் வாஞ்சியாரின் வடுகுச் சந்தத்தைப் பற்றிக் குறிப்பிடு கிருர். இதை முதன் முதலில் மு. ராகவையங்கார் அறிந்து வெளி யிட்டார். இந்த வாஞ்சியார் ஆந்திரக் கவிஞர் ரேசனு என்பவரைக் குறிக்கலாம் என்று அறிஞர்கள் சிலர் நம்புகின்றனர்.

கவிச்சக்ரவர்த்தி கம்பன் தெலுங்கு அரசரான முதல் பிரதாப ருத்திரன் அரசவைக்கு போனதாகவும், அங்கு அவர் பல பரிசுகள் பெற்றதாகவும், பின்னர் கம்பன் அரசரின் மேல் ஒரு பாட்டுப் பாடியதாகவும் ஒரு வரலாறு வழங்குகிறது. கம்ப ராமாயணத்தில் தம்மி, அக்கட என்னும் தெலுங்குச் சொற்கள் இருப்பதும் கவனிக்கத் தக்க செய்தியே. திருப்புகழ், விறலி விடுதூது போன்றதமிழ் நூல்களில் சில தெலுங்குச் சொற்கள் காணப்படுகின்றன.

தெலுங்கு இலக்கியத்தில் மாபெரும் காப்பியமாகக் கருதப் படும் வசு சரித்திரத்தை அம்பலத்தாடும் ஐயன் என்பவர் நாயக்கர் காலத்திலேயே தமிழில் மொழிபெயர்த்தார். இன்னும் வேமன்னு பாடல்கள், நன்னய்யா, திக்கன்னு, எர்ரன்னு என்னும் கவித்ரயம் எழுதிய மகாபாரதம் போன்ற சிலதெலுங்கு நூல்களும் தமிழில் அவ்வப்போது கடந்த நூற்ருண்டுகளிலே வெளி வந்துள்ளன.

தெலுங்கு–தமிழ் உறவு வைணவக் கவிஞர்களின் காலத்தில் மிகவும் வலுப் பெற்றது என்று சொல்லலாம். தமிழ் வைணவர்களின் பழக்க வழக்கங்களுடன், அவர் பேசும் தனிப்பட்ட தமிழ் மொழியும் தெலுங்கு வைணவர்களின் ஆதரவைப் பெற்றது. திரு என்னும் சொல்லைத் தெலுங்கு வைணவர்கள் கையாளும் முறையை தாசு ஸ்ரீராமலு என்னும் கவிஞர் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட தம் ‘தெலுங்கு நாடு’ என்ற நூலில் நகைச்சுவை ததும்ப விளக்கிஞர்.

“திருமணி திருசூர்ண திருநாள்ளு
திருமந்திர, திருமாளிகயு, திருக்கரியமதுலு
திருவீதி, திரிகலு திருநாமமுலு
திருவாராதனமு திருவாய்மொளியு...............”

தமிழில் உள்ள திவ்யப் பிரபந்தம் குறிப்பாக-திருவாய் மொழி, ஆண்டாள் பாசுரங்கள் தெலுங்கு வைணவர்களுக்கும் புனித மானவை. திருவாய் மொழிக்கு தெலுங்கில் எத்தனையோ மொழிபெயர்ப்புகள் வந்திருக்கின்றன. முத்துப்பளனி, வேடூரி பிரபாகரசாஸ்திரி மற்றும் பலர் ஆண்டாள் பாசுரங்களை மொழி பெயர்த்தார்கள். இன்றைக்கும் தெலுங்கு நாட்டில் சில வைண வக் கோவில்களில் திவ்வியப் பிரபந்தத்தை தமிழிலேயே பக்தி யோடு பாராயணம் செய்து கொண்டு வருகிறார்கள். இங்கு ஒரு கருத்தை சொல்ல விரும்புகிறேன். வைணவம் தெலுங்கு நாட்டில் பரவுதற்கு தமிழ் பிரபந்தங்கள் பெரிதும் காரணமாக இருந்தாலும் இன்றைய தமிழ் வைணவர்களின் குடும்பப் பெயர் களைப் பார்த்தால் அவற்றில் பல தெலுங்கு நாட்டின் ஊர்ப் பெயர்களாக இருக்கின்றன. உதாரணமாக சேட்லூர், ஆனெ கொந்தி, வங்கிபுரம், கி டா ம் பி, அந்தங்கி முதலியவை தெலுங்கு நாட்டைச் சேர்ந்த ஊர்கள்.

ஆந்திரபோஜர் என்னும் பேரும் புகழும்பெற்ற ஸ்ரீகிருஷ்ண தேவராயர் பரம வைஷ்ணவர். சூடிக் கொடுத்த நாச்சியார் கதையை 'ஆமுக்த மால்யதா'என்று தெலுங்கிலே காப்பியமாக இயற்றியுள்ளார். இந்நூலில் வைணவர்களின் சம்பிரதாயங்கள், உணவுப் பழக்கங்கள் முதலியவற்றை விரிவாகக் கூறியுள்ளார். பொரி விளங்காயின் பெருமையையும் அவர் விட்டு விடவில்லை.

அண்மையில் திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதி காரம், பெரியபுராணம் போன்ற சிலநூல்கள் தெலுங்கில் வந் துள்ளன. தமிழ் இலக்கியத்தை நன்கு அறிந்து கொள்வதற்கு இந்த மொழிபெயர்ப்புகள் உதவும் என்று சொல்லலாம்.

இவ்விதமாகப் பண்டைக் காலத்திலிருந்து இலக்கிய வாயி லாகவும், சரித்திர பூர்வமாகவும் தெலுங்கர் தமிழர்களிடையே நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது,

"நேற்று முன்னாளில் வந்த உறவன்றடீ! மிக
நெடும் பண்டைக் காலமுதல் சேர்ந்து வந்ததாம்..........."

என்று மகாகவி பாரதியார் கூறியது தமிழ் தெலுங்கு மொழி உறவுக்குப் பொருந்தும்.

ஸ்தல விநாயக மூர்த்திகள்

தணிகைமணி
திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, அவர்கள், M. A.,
சென்னை

சில தலத்து விநாயக மூர்த்திகள் சில திருவிளையாடல்களைச் செய்து, அது காரணமாகத் தமக்கென்ற சிறப்புப் பெயர் பெற்றிருக்கின்றனர். அவை தம்முள் ஒரு சில கூறுவாம்:

1. ஓலமிட்ட விநாயகர்.

காவிரியாற்றில் மிகுந்த வெள்ளமா யிருந்ததால், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆற்றின் தென்கரையி லிருந்து "ஐயா றுடைய அடிகளோ" என அழைக்கும் திருப்பதிகத்தைப் பாட, ஆற்றின் வடகரையில் வீற்றிருக்கும் பிள்ளையார், கன்று அழைத்தலைக் கேட்டுக் கதறிக் கனைக்கின்ற பசுப்போல, சரா சரங்கள் எல்லாம் கேட்கும்படி, "ஓலம்" "ஓலம்" என்று எதிர் விடை கூறினாராம். காவிரியாறு வழிவிட, வடகரையில் இருந்த திருவையாற்றை சுந்தரர் தரிசித்தனர். இக்காரணத் தால் இத்த விநாயகர் "ஓலமிட்ட விநாயகர்" என்னும் பெய ரைப் பெற்றனர்—என்ப.

இவருடைய சந்நிதி "ஆட்கொண்டார்" சந்நிதியின் பக்கத்தில் இருக்கின்றது:

2. கடுக்காய்ப் பிள்ளையார்.

திருவாருருக்குத் தெற்கு 8½ மைல் தூரத்தில் "திருக்காறை வாசல்" என வழங்கும் 'திருக்காருயில்' என்னும் தேவாரம் பெற்ற தலம் இருக்கின்றது. கோயிலுக்கு வடபுறத்தில் உள்ள "இந்திர தீர்த்தம்" என்னும் திருக்குளத்தின் வடகரையிற்

மேலே கண்ட கட்டுரை, அமிர்தவசனி பத்திரிகை ஆசிரியர் அவர்கள் இசைவு பெற்று பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

கடுக்காய்ப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். ஒரு வர்த்தகன் ஜாதிக் காய் மூட்டைகளை வாழையிலையில் சுற்றிச் சென்றனன். இம் மூட்டைகள் என்ன மூட்டைகள் என்று ஒரு பிள்ளைபோல் எதிரில் வந்த இந்தப் பிள்ளையார் அவனைக் கேட்டபொழுது, அவன் இவை கடுக்காய் மூட்டைகள் என்று பொய் சொல்ல, இவ் விநாயகருடைய திருவிளையாடலால் அவை அவ்வாறே ஆக, வர்த்தகன் பணிந்து கேட்டுக்கொள்ள, அவை முன்போல ஜாதிக் காய்களான காரணத்தால் விநாயகருக்குக் "கடுக்காய்ப் பிள்ளையார்" என்றும் திருநாமம் போந்தது.

3. கரும்பாயிரங் கொண்ட பிள்ளையார்.

இவர் கும்பகோணத்தில் வீற்றிருக்கும் பிள்ளையார். இவர் சந்நிதிக்கெதிரே வந்துகொண்டிருந்த கரும்பு வியாபார வர்த்தகன் எதிரே இவர் ஒரு பிள்ளைபோல வந்து, 'ஒரு கரும்பு தா' என்று கேட்டபொழுது, வர்த்தகன் இவை 'பேய்க்கரும்பு' உண்ண உதவா என்றனன். இப்பிள்ளையாரின் திருவிளையாடலால் கரும்புகள் எல்லாம் பேய்க்கரும்புகள் ஆயின. வர்த்தகன் அழுது, பிள்ளையாரே! உன் சந்நிதி எதிரிற் பொய் சொன்னேன். இவை முன்போல நல்ல கரும்புகளாக மாறினால் உனக்கு ஆயிரம் கரும்பு சமர்ப்பிக்கின்றேன் எனப் பிரார்த்தித்தனன். அவன் வேண்டுகோட்கிரங்கின விநாயகர் அவைகளை நல்ல கரும்புகளாக்கித் தாமும் ஆயிரம் கரும்புபெற்ற காரணத்தால், "கரும்பாயிரங் கொண்ட பிள்ளையார்" எனப் பேர் பெற்றார்.

4. கூப்பிடு பிள்ளையார்.

பூதர்களை வேடர்களாக்கிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நிதிகளைத் திருமுருகன் பூண்டி என்னும் தலத்துச் சிவபெருமான் பறித்தனர். வழிமறித்து நிதிபறித்த இறைவன் இருக்கும் இடத்தைக் கூவென்று கூவிச் சுந்தரருக்குக் காட்டிய விநாயகர், திருமுருகன் பூண்டிக்கு $\frac{1}{2}$ மைல் தூரத்தில் அவிநாசிக்குப் போகும் வழியில் வீற்றிருக்கின்றார்; கூவிக் காட்டிய காரணத்தால், இவருக்குக் "கூப்பிடு பிள்ளையார்" என்னும் பெயர் வந்தது.

5. கைகாட்டி விநாயகர்.

திருவாருருக்கு அடுத்த மாவூர் ரோட் ரெயில்வே ஸ்டேஷனுக்கு 3½ மைல் தூரத்தில் உள்ளது திருநாட்டியத்தான்குடி என்னும் தேவாரம் பெற்றதலம். இத்தலத்துக்குச் சுந்தரர் வந்து சுவாமியைக் காணமல் விநாயக மூர்த்தியைக் கேட்கச், சுவாமியிருந்த இடத்தை விநாயகர் கைநீட்டிச் சுட்டிக் காட்டிய காரணத்தால் இக்கணபதிக்குக் "கைகாட்டி விநாயகர்" எனப்பேர் போந்தது.

6. செவி சாய்த்த விநாயகர்.

கொள்ளிடத்துத் தென்கரையில் நின்ற சம்பந்தர், அப்பர் பாடிய பாடல்களைச் செவி சாய்த்துக் கேட்டு மகிழ்ந்த காரணத்தால் இவருக்குச் 'செவிசாய்த்த விநாயகர்' எனப்பெயர் வந்தது. இவர் திருவுருவம் லால்குடி ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 3 மைல் தூரத்தில் உள்ள 'கீழன்பில்' என வழங்கும் 'அன்பிலாலந்துறை' என்னுந் தலத்துத் திருக்கோயில் பிரகாரத்தில் தென்மேற்கில் இருக்கின்றது.

7. துணையிருந்த பிள்ளையார்.

திருவாருருக்கு வடக்கு 6½ மைலில் உள்ள 'ஆண்டிப் பந்தல்' என்னும் கிராமத்துக்குக் கிழக்கு 1 மைலில் 'திருப் பனையூர்' என்னும் தேவாரம் பெற்ற தலம் இருக்கின்றது. இவ்வூரில் வளர்ந்த கரிகால் சோழனுக்குப் பிள்ளையார் துணையிருந்தாராம். அதனல் இப்பிள்ளையாருக்குத் "துணையிருந்த பிள்ளையார்" எனப் பெயர் போந்ததாம்.

8. பிரளயங் காத்த பிள்ளையார்.

கும்பகோணத்துக்கு 6 மைல் தூரத்தில் திருப்புறம்பயம் என்னும் தலம் இருக்கின்றது; இங்கு விநாயகர் வெண்மை நிறத்தினர். விநாயக சதுர்த்தியன்று ஒரு குடம் தேன் அபிஷேகம் செய்யப் படுகிறது. பிரளய நீர் வந்தபோது அந்தப் பிரளயம் இத்தலத்திற்குப் புறம்பே (வெளியிலேயே) நிற்கும்படி செய்து ஊரைக் காத்தனர். அக்காரணத்தால் இவருக்குப் "பிரளயங் காத்த பிள்ளையார்" எனப் பேர்போந்தது.

9. மாற்றுரைத்த பிள்ளையார்.

விருத்தாசலத்துத் திருக்கோயிலில் அறுபத்துமூவர் உருவங்களுக்கு இறுதியில் "மாற்றுரைத்த பிள்ளையார்" இருக்கின்றனர்: அவ்வாறே திருவாரூரிற் கமலாலயம் எனப்படும் திருக்குளத்தின் ஈசான்ய மூலையிலும் "மாற்றுரைத்த பிள்ளையாரின்" சந்நிதி ஒன்றுளது; விருத்தாசலத்தில் இறைவன் சுந்தரருக்குக் கொடுத்த பொன்னின் உரைமாற்றை, அத்தலத்து விநாயகர் அடுத்துக் கொடுத்தபடியே சரியாக இருந்ததைத் திருவாரூரிற் பிள்ளையார் மாற்றுரைத்துக் காட்டின காரணத்தால், இந்தக் கணபதிகளுக்கு இவ்விரண்டு தலங்களிலும் "மாற்றுரைத்த பிள்ளையார்" எனப்பேர் போந்தது.

10. வீரஹத்தி விநாயகர்.

வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காட்டுத் திருக்கோயிலில் வெளிப் பிரகாரத்தின் மேல்பால் "வீரஹத்தி விநாயகர்" மேற்கு நோக்கி வீற்றிருக்கின்றார். ராவணனைக் கொன்ற பிரமஹத்தி தோஷம் நீங்க ஸ்ரீராமர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்ததலம் இராமேசுரம். அவரைத் தொடர்ந்த "வீரஹத்தி" யைத் தீர்த்தருளினர் வேதாரண்யத்தில் உள்ள "வீரஹத்தி விநாயகர்."

இதனை—

'எங்கும் வடிவாய் நின்று, திருமறைக் காட்டினில் இராமர் பின்னே தொடர்ந்து வரும் வீரகத்தி தீர்த்தருள் செய்யும் விநாயகர் எனவரும் க்ஷேத்திரக் கோவை பிள்ளைத் தமிழிற் காண்க.

[வருகைப் படலம் 6]

11. விகட சக்கர விநாயகர்.

இவர் காஞ்சி-ஏகாம்பரேஸ்வரர் கோயில் வெளிப்பிரகாரத்தில் கம்பாநதி என்னும் தீர்த்தத்துக்கு அருகில் உள்ள மண்டபத்தில் வீற்றிருக்கின்றார்.

தக்கன் யாகத்தை அழிக்க வந்த வீரபத்திரர்மீது திருமால் தமது சக்கரத்தை ஏவ, வீரபத்திரர் பூண்டிருந்த 'வெண்டலை'

ஒன்று அந்தச் சக்கரத்தைக் கௌவி விழுங்கிற்று; அந்த சக்கரத்தைத் திரும்பப் பெறவேண்டித் திருமாலின் சேனைத் தலைவனும் 'விடுவச் சேனன்' வீரபத்திரரின் முன் விகடக் கூத்தாட, வெண்டலை சிரித்தது. அப்போது அதன் வாயிலிருந்து சக்கரம் வெளியே விழ்ந்தது. அதை விநாயக மூர்த்தி எடுத்துக் கொள்ள, விடுவச் சேனன் அந்த விநாயக மூர்த்தியின் முன்பு பின்னும் ஒரு முறை விகடக் கூத்தாடி அந்தச் சக்கரத்தை அவர் தரப்பெற்றுத் திருமாலிடம் அதைச் சேர்ப்பித்தான். விகடக் கூத்தைக் கண்டு சக்கரம் அளித்த காரணத்தால் "விகட சக்கர விநாயகர்" எனப்பேர் பெற்றார் இவ் விநாயகர்.

12. ஆபத்சகாய விநாயகர்.

இவர் திருத்தணிகை மலைமீதுள்ள ஆலயத்தில் பிரதான விநாயகர். முருகவேள் கிழவராய் வள்ளியிடம் சென்று தம்மை மணந்துகொள அன்று வேண்டிய போது, 'முடியாது' என்று முரண்செய்த வள்ளியை இணங்கும்படி செய்ய வேண்டித் தனக்காகத் தமையனும் விநாயக மூர்த்தியை அழைக்க, அவர் யானையாகத் தம்பி தனக்காக வனத்தணைந்து வள்ளியை அச்சுறுத்தி இணங்கச் செய்தார். தம்பிக்கு உற்ற ஆபத்திற் சகாயம் செய்த காரணத்தால் "ஆபத்சகாயர்" எனப் பேர் பெற்றார்.

பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும்

திருப்புகழ் சதுரர்

திரு. சே. த. ராமலிங்கம் பிள்ளை அவர்கள், B. A., B. T.

துறவு நிலை:

இல்லற மேற்பார் பலர். துறவறம் ஏற்பாரும் சிலர் உண்டு. ஈண்டுத் துறவறம் என்பது போலித் துறவு அன்று. உண்மையாக அகமும் புறமும் ஒத்த துறவே என்க. மெய்த்துறவின் நிலையும் துறவு கொள்வோர் ஒழுக்கம் பற்றிய விளக்கமும் அடிகளார் துறவு மேற்கொண்ட வகையைக் கூறியபோது விவரிக்கப்பட்டன. இங்குத் துறவுடையார் மேற்கொள்ளும் சில சின்னங்களைப் பற்றி ஆராய்வோம்.

துறவுச் சின்னங்கள்:

சடைமுடி அல்லது முண்டிதப்படு (மொட்டையான) சென்னி (தலை). கல்லாடை என்னும் காவியாடை, நீறு, கண்டிகை முதலியனவாம். இவை யனைத்தும் புறச் சின்னங்கள். உண்ணும் உணவு முதலியவற்றில் இனிய சுவை எதனையும் விரும்பாமல், பசித்தபோது கனியோ, காயோ கிழங்கோ கிடைத்ததை உண்ணலும், கொட்டை மெத்தை தலையணை பஞ்சணை விரும்பாது தரையில் கிடத்தலும், வேண்டுதல் வேண்டாமையின்றி எவ்வுயிர்க்கும் அருள் தாங்கி இறைவனை எண்ணி வாழும் வாழ்க்கையும் பெறுதலாம். இவைபோல்வன பலவுள. பாண்டிய மன்னருக்கு அமைச்சராம் பதவி பெற்றுத் தென்னவன் பிரமராயன் என்னும் நற்பட்டமும் தாங்கி யிருந்தார் வாதவூரடிகள். அவரைப் பெருந்துறையுள் குருந்த நிழலில் இறைவன் உபதேசம் செய்து ஆட்கொண்டார். அமைச்சரும் அன்றே பெருமானுக்கு

மேலே கண்ட கட்டுரை, அமிர்தவசனி பத்திரிகை ஆசிரியர் அவர்கள் இசைவு பெற்று பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

அவரது ஆவியும், உடலும் உடமை யெல்லாமும் அர்ப்பணஞ் செய்து மாபெருந் துறவியானுர்.

சின்னங்களின் தத்துவம்:

சடைமுடி தாங்குதல் அல்லது மழுங்க மொட்டையடித்தல். இவை தம்மை அலங்கரித்துக்கொள்ளும் தேகாபிமானம் கழன்ற நிலையைக் காட்டுவதற்கே யாம். அங்ஙனமின்றி பசுத்தோல் போர்த்த புலி என்னும்படி சடைமுடி தாங்கியோ, பளபளப்பாக மொட்டை அடித்துக் கொண்டோ பிறரை வஞ்சிக்க எண்ணினுல் அவ்வகைப் போலித் துறவிகளது சின்னங்கள் இகழ்ந்து ஒதுக்கத் தக்கனவே. இந்நிலையை எண்ணியே,

“மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்”

என நம் பெருநாவலர் பேசினுர். நீறு பூசுதல் - சந்தனம் முதலிய நறுமணம் வெறுத்த தன்மைமையும், உருத்திராக்கம் அணிதல்- பல வகையான ஆபரணங்களையும் பொன்னையும் வெறுத்த துறவு நிலையையும் குறிப்பனவே.

காவியாடை உடுத்தல்:

குப்பை மேட்டில் கிடக்கும் கந்தலைக் கோவணமாக அணிவர்.

“சோறிடும் நாடு துணிதரும் குப்பை(மேடு)”

என்ற பட்டினத்தடிகளின் திருவாக்கால் அறிக. அந்தக் கந்தையும் மிகை என்றிருந்த கருத்தினரும் இருந்தனர். பொதுவாகத் துறவியர் அணிவது காஷாயம். இது காவிக் கல்லால் நிறமேற்றப் பட்ட செந்நிற ஆடை. இதனைச் சீடன் பக்குவ நிலையறிந்து ஆசான் அருளுவான் எனவும் கூறப்படுகிறது. இவ்வாடையின் சிறப்பு என்னவென்ருல், இதில் தோய்ந்த செம்மண் புழுப்பூச்சிகளை அருகில் வர வொட்டாது. மேலே கூறியபடி துறவிகள் காடோ, மலையோ, மரத்தடியோ, எங்கேனும் உட்காரவோ, படுக்கவோ நேரிடும். அவர்களணிந்துள்ள காவியாடையுள்ள இடத்தில் புழுப் பூச்சிகள் வரமாட்டா.

அவற்ருல் அவர்களுக்கு இடையூறு நேராது. நமது வீட்டிலும் சுவர்களின் ஓரத்தில் செம்மண் இடுவதும். பூச்சி புழுக்கள் வரவொட்டாமல் தடுக்கவேயாம். தேகாபிமானம் விட்ட துறவிகட்கு இவ்வித காவல் அவசியமில்லை என்ருலும், அவர்களை ஆட்கொள்ளும் ஆசான் அவர்களிடம் கொண்ட கருணையால் தருவதாகலின், அதனைத் துறவிகள் ஏற்றுக் கொள்வது மரபு.

பாம்பனடிகள் கல்லாடை புனைந்த வகை:

துறவியர் திலகமாக விளங்கியவர் நமது அடிகளார் காவி யாடை புனைந்து வஞ்சனை புரியும் சிலரால் அவ்வித ஆடையணி யும் துறவிகளைப் பலரும் இகழ்தல் நோக்கி, சுவாமிகள் பிரப்பன் வலசை மயான நிஷ்டைக்குப்பின் கோவண ஆடை ஒன்றே தரித்திருந்தார். அன்பர்கள் வேண்டுதலை அங்கீகரித்து வெள்ளை ஆடை மட்டும் மேலே போர்வையாக அணிவாராஞர். ஆனல் கல்லாடை புனைய வேண்டும் என்று கந்தபிரான் கருதினர். அதனுல் ஓரற்புதம் நிகழ்ந்தது. பொன்னெளி போல அருள் ஒளி என்றும் வீசும் சிறப்புடையது காசி. நமது சுவாமிகள் 1902ல் விஜயவாடா, கோதாவரி, விசாகப்பட்டினம், ஜகந்நாதம், கல்கத்தா, கயா முதலிய இடங்களைக் கண்ணுற்ற பின் காசி நகரை அடைந்தார். கங்கையில் நீராடி அயோத்தி, பிரயாகை முதலியன தரிசித்து மீண்டும் காசி வந்தனர். அங்கே செந்திலாண்டவன் திருவருள் பெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமி கள் அமைத்த திருமடத்தில் தங்கினுர். சுபகிருது வருடம் ஆடி மாதம் 22-ம் நாள் புதன்கிழமை பூர நட்சத்திரம் கூடிய நன்னு ளில் அம்மடத்திலுள்ள குமரகுருபரரை வணங்கினுர். பிறகு மேன்மாடியில் இவருக்குச் சில அன்பர்கள் பாசிப் பயறும் பாலும் கலந்த உணவு ஏற்பாடு செய்தனர். அதனை அடிகளார் உண்டு கைகழுவிக் கீழே வந்தனர். அப்போது அவர்கள் மேல் போர்த் திக் கொள்ளும் வெள்ளை ஆடை தாம் வைத்த இடத்தில் வந்து பார்த்தபோது காணப்படவில்லை. இதன் காரணம் யாதோ என்று சிந்தித் திருந்தனர் நமது அடிகளார்.

அப்போது அந்த மடத்தி லிருந்த ஒருதுறவி இவரெதிரில் வந்தார். பொன் நூல் இடப்பட்ட இரண்டு புதிய காவியாடை

களைக் கொணர்ந்து ஒன்றைப் பாம்பனடிகளின் அரையிற் சுற்றினார்; மற்றொன்றை மேலாடையாகப் புனைந்து வணங்கினார். அடிகளாருக்கு இதன் பொருள் ஒன்றும் விளங்கவில்லை. உடனே வயோதிகரான துறவி, "அன்பரே! இது குமரகுருபர சுவாமிகள் மடம்: தாங்களும் அதே பெயருடைய(குமரகுருதாச, சுவாமிகள்.) இங்கு தரப்பட்ட ஆடைகளை ஏற்பது உமது கடமை. என்னை அறியாமலேயே இச்செயல் என் மனத்தில் தோன்றியது. இவற்றைத் தள்ளாமல் ஏற்பீராக" என்றனர். உடனே இது குமரகுருபரன் ஆணை எனவே மதித்த அடிகள் அன்று முதல் காவியுடை தரிப்பவரானார் இவற்றை,

"காசிக் குமர குருபரன் செய்த கனமடத்தில்
ஏசற்று நின்ற எனது அரையில் குமரேசன் அன்பர்
தூசில் சிறந்தபொன் காடாய வத்திரம் சுற்றினரே"

"சுற்றும் அமையம் குமரகுருபர சாமி சொந்தம்
உற்ற மடம் இதுஇங்கே யிட்டகாவியுடை இரண்டும்
பெற்றிடல் நின்கட னாகும் குமரகுருப் பெயரே
பெற்ற சுவாமி! எனவுரைத்தார் அந்தப் பேரன்பரே."

"பின்னும் எனை இங்கு அறியாது எழுந்தது இப்பெற்றி இதை
நன்னரிலை எனத் தள்ளேல் எனவும் நவின்ற அன்னார்
சொன்ன மொழியைக் குமரகுருபரன் சொல்லெனவே
என்ன திதயமும் ஒப்பிப் பரவசம் எய்தியதே"

என்று விளக்கமாக 'காசி யாத்திரை' என்ற நூலில் அடிகளாரே அருளியுள்ளமை நோக்குக.

கச்சியும் கச்சபேசமும்

திரு. ந. ரா. முருகவேள் அவர்கள்

முன்னுரை

'கச்சி' என்பது காஞ்சிபுரத்திற்கு மிகப் பழங்காலந் தொட்டு வழங்கி வரும் பெயர். "கச்சியோனே கைவண் தோன்றல்" என்பது பெரும்பாணாற்றுப் படை, மணிமேகலையின் கண் "கச்சி மாநகர் புக்க காதை" என வருதலும் காணலாம். கச்சி என்னும் சொல்லைப் போலவே 'காஞ்சி' என்னும் சொல்லும் மிகப் பழமையானதொன்று.

அருளியல் நகரம் :

காஞ்சிபுரம் முத்திதரும் நகரங்கள் ஏழனுள் முதன்மை மிக்கது. இதனை 'நகரேஷு காஞ்சி' என்னும் வட சொற்றொடர் இனிதுணர்த்தும். உலகிலேயே மிகப் பழமை வாய்ந்த நகரங்களுள் ஒன்றாக மதிக்கத்தக்க மாட்சிமையுடையது காஞ்சிபுரம். கி. பி. 640இல் இயூன்-சங்க் என்னும் சீன யாத்ரிகன், இங்குவந்து அதன் சிறப்புக்களைக் கண்டு வியந்து பாராட்டிச் சென்றிருக்கின்றான். 'நகர அமைப்பு (Town Planning) முறையில், காஞ்சிபுரம் உலகிலேயே மிகவும் சிறப்பிடம் பெற்றொளிர்கின்றது' எனக் கெட்டிஸ் (Prof. Geddes) துரைமகனார் புகழ்ந்து போற்றுகின்றார். உலகில் எத்துணையோ பல சிறந்த பெருநகரங்கள் தோன்றிச் சிலகாலம் இருந்து, பின்னர் இருந்த இடமும் தெரியாமல், மருங்கற அழிந்து மாய்ந்தொழிந்து போயின. நமது தமிழகத்திலேயே, சோழர்களின் தலைநகரங்களாக விளங்கிய உறையூர், காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்களும், சேர வேந்தர்களின் தலைநகரமாகத் திகழ்ந்திருந்த வஞ்சிமாநகர் முதலியனவும் அழிந்து போயின. ஆனால், பாண்டியர்களின் தலைநகரம் ஆகிய மதுரையும், பல்லவர்களின் தலைநகரமாகிய காஞ்சியும் தொன்று தொட்டு இன்றுகாறும், தம் பழஞ் பெருஞ் சிறப்புக்களிற் சிறிதும் குன்றாது நின்று நிலவி வரு

சென்னை "சித்தாந்த" ஆசிரியர் அவர்கள் அனுமதிப் பெற்று வெளியிடப் பெற்றுள்ளது,

கின்றன. மதுரையின் மாட்சிமைக்கு மீனட்சியம்மை காரணம். காஞ்சியின் பெருமைக்குக் காமாட்சியம்மை காரணம். அம்மையின் அருள் காரணமாகவே இவ்விரு பெரு நகரங்களும் செழித் தோங்கிச் சிறந்து திகழ்ந்து வருகின்றன.

கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர் :

காஞ்சிபுரத்தின் புகழ் மிகப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே தேசம் எங்கும் பரவியிருந்தது. பிறதேசங்கள் எல்லாம் காஞ்சியின் சிறப்பினைப் புகழ்ந்து கொண்டாடின. இதனை ஏறத்தாழ 1600 ஆண்டுகட்கு முற்பட்டவராகக் கருதப் பெறும் மாணிக்கவாசகர், 'தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்' என அருளிச் செய்திருத் தல் கொண்டு உணரலாம். 'தேசமெல்லாம் புகழ்ந்தாடுதல் என்னும் அடைமொழி, கச்சிக்கும் திருவேகம்பன் செம்பொற் கோயிலுக்கும் பொருந்துவதாகும். இங்ஙனமே 'கல்வியிற் கரை யிலாத காஞ்சிமாநகர்' என்று திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்திருத்தலும் அறிந்தின்புறற்பாலது. சந்திரகுப்த மௌரி யனின் அமைச்சராக விளங்கி, 'அர்த்த சாஸ்திரம்' என்னும் அரிய பெரிய நூலினை எழுதிய சாணக்கியர் காஞ்சிபுரத்திற் பிறந் தவர். சங்கரர், இராமாநுஜர், பரிமேலழகர் போன்ற பெருமக்கள் காஞ்சியில் வாழ்ந்தவர்கள். பௌத்த சமயத்தின் பெருநூலாசிரி யர்களாகச் சைனு, திபெத்து, ஜப்பான், பர்மா இலங்கை முதலிய நாடுகளிளெல்லாம் போற்றப் பெறும் புகழ் ஓங்கிய திக்கநாகர் தருமபாலர், தரும கீர்த்தி முதலிய பெருமக்கள் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்களே யாவர். கடம்ப அரசர் குலத்தைத் தோற்றுவித்த முதல்வனுகிய மயூரசன்மன் (கி.பி. 350) என்னும் மன்னவன் பல்ல வர்களுக்குப் பகைவனுயினும், 'கல்வியிற் கரை இலாத காஞ்சி' மாநகரத்தின் சிறப்புக் கருதி, அங்கு மாறுவேடங் கொண்டு மறைந்து வந்திருந்து கல்வி பயின்று சென்றனன் என வரலாறு கூறுகின்றது! காஞ்சிபுரம் கயிலாச நாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயிற் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றனவாகும்.

சான்ருேர்கள் போற்றிய காஞ்சி:

காஞ்சிபுரம் திருக்குறிப்புத்தொண்டர், சாக்கியர், ஐயடிகள் காடவர் கோன் என்னும் நாயன்மார்கள் வாழ்ந்திருந்து வழிபட்டு அருள்

பெற்ற மாட்சிமை சான்றது. கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாசாரியார், சேக்கிழார் சுவாமிகள், சிவஞான சுவாமிகள், தணிகைப் புராணம் முதலியன பாடிய கச்சியப்ப முனிவர் முதலிய பெருமக்கள் பலரும் காஞ்சிபுரத்தின்பால் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். காஞ்சிபுரத்தில் தங்கியிருந்த பொழுதே ஆசிரியர் சிவஞான சுவாமிகள், சிவஞான போதப் பேருரையினை வகுத்தருளினர் என்பர். சேக்கிழார் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றினைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தொண்டர் நாட்டின் பெருமையினையும், காஞ்சிபுரத்தின் சிறப்புக்களையும் சுவைதுளும்பப் பெரிதுவந்து பாடுகின்றார். காஞ்சி என்னும் சொல்லே அவர்தம் திருவுளத்தில் தேனும் இன்னமுதமுமாய்த் தித்திக்கின்றது. ஆதலின், அவர் அதனைத் திரும்பத் திரும்பப் பலகால் பல பொருள்களில் அமைத்துப் பின்வரும் செய்யுளிற்பாடி இன்புறுத்துகின்றார்.

"தண் காஞ்சி மென்சினைப்பூங் கொம்பர் ஆடல்
 சார்ந்தசைய, அதன்மருங்கு சுரும்பு தாழ்ந்து
பண்காஞ்சி இசைபாடும் பழனவேலிப்
 பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரில் நீடும்
திண்காஞ்சி நகர், நொச்சி இஞ்சி சூழ்ந்த
 செழுங்கிடங்கு, திருமறைகள் ஒலிக்கும் தெய்வ
வண்காஞ்சி அல்குல்மலை வல்லி காக்க
 வளர்கருணைக் கடலுலகம் சூழ்ந்தால் மானும்"

காஞ்சி என்னும் சொற்பொருட் காரணம்:

இங்ஙனம் சேக்கிழார் பெருமான் திருவாய் நவிற்றி மகிழ்ந்த 'காஞ்சி' என்னும் சொல்லின் செம்பொருட் குறிப்புக்களை எல்லாம், ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தாம் இயற்றியருளிய காஞ்சிப்புராணம் என்னும் நூலில் அழகுற விளக்குகின்றார்.

க + அஞ்சி = காஞ்சி

1. க-பிரமம், சிவபெருமான்; அஞ்சித்தல் - வழிபடுதல். சிவபெருமானை, அம்மை அயன் மால் முதலிய பலரும் வழிபட்டு அருள்பெற்ற இடமாதலின், 'காஞ்சி' என்னும் காரணப்பெயர் இந்நகரத்திற்கு அமைவதாயிற்று.

"பிறங்கு கவ்வெனும் மொழிப்பொருள் பிரமம்.
பிரமம் ஆனயாம் அஞ்சிக்கப் படலால்,
உறங்கிடாப் புகழ்க் காஞ்சிஎன் றுரைக்கும்
ஒருதிருப் பெயர் எய்தும் இந்நகரம்."

'பிரமம்' என்னும் சொல் சிவபெருமானைக் குறிக்கும் என்பதற்குப் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், "ஆதிப்பிரமம் வெளிப்படுத்த அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே" என வரும் திருவாசகத் திருமொழியினை மேற்கோள் காட்டியிருப்பது உணர்ந்து இன்புறுதற்குரியது.

2. க-பிரமன், அயன், நான்முகன், அஞ்சுதல்-பூசித்தல், வழிபடுதல். நான்முகக் கடவுளாகிய பிரமன் வழிபட்டு உலகைப் படைக்கும் ஆற்றலைப் பெற்ற இடம்.

"கவ்வென்பது அயன்பேர் என்ன, முந்து இருக்கு ஓதும்
அஞ்சு என்பகுதி அடைவோடு பூசை மொழியும் மாதோ".

"திசைமுகனும் அஞ்சிக்கப் படுதலினுல்
காஞ்சி எனத் திசைபோய் மல்கும்".

3. க-சென்னி, தலை; அஞ்சித்தல் - வழிபடுதல் எத்தகையவரும் தலையாய தலம் எனச் சென்னி மேற்கொண்டு வழிபடத் தக்கது.

4. க-இன்பம்; அஞ்சித்தல் - அடைவித்தல்; யாவர்க்கும் பேரின்பத்தை அடைவிப்பது.

"மற்றும் கவ்வெனல் சென்னியோடு இன்பம்
மலரவன் தலையுணர்த்தும்; அஞ்சித்தல்
சொற்ற பூசனை அடைவும் ஆம். யாரும்
சென்னி மேற்கொடு தொழத்தகும் சிறப்பால்,
பற்றி வைகுநர் பேரின்பம் உறலால்,
பங்க யத்தவன் வழிபட லாறும்,
பெற்ற தாகும் இத்தி ருப்பெயர் இதனுல்
பிரம லோகம் என்று ரைக்கவும் படுமால்."

5. காஞ்சி—மகளிரின் உந்தி, கொப்பூழ். நிலமகளுக்கு உந்தித் தானத்தைப் போன்ற சிறந்த தலம்.

"இலகு வாள்நகை அரிமதர் மழைக்கண்
இருண்ட வார்குழல் வேய்மருள் பணைத்தோள்
கலப மாமயில் இயல் எழில் மடவார்
உந்தித் தானத்தைக் காஞ்சி என் றுரைப்பர்;
சுலவு வெண்டிரைப் பனிக்கடல் உடுக்கைத்
தொல்லை நானில மடக்கொடி தனக்குக்
குலவு காஞ்சி[1]நற் றுனமாய்ப் பொலிந்த
கொள்கை யானும்அத் திருப்பெயர் வழங்கும்."

காஞ்சியின் சிறப்பு :

காஞ்சிபுரம், கோயில்கள் நிறைந்த நகரம். அதனைப் போன்ற மிகச் சிறந்த கோயில்கள் நிறைந்த நகரம் பிறிதொன்றில்லை எனலாம். பலவகைப் பட்டனவும், பழமையும் பெருமையும் வாய்ந்தனவும் ஆகிய கோயில்கள் அங்குள்ளன. சமணம் பௌத்தம், சைவம், வைணவம் என்னும் பல்வேறு சமயங்களின் கோயில்களும் அங்கு உண்டு. பல்லவர் காலம், சோழர் காலம், பிற்காலம் ஆகியவற்றைச் சேர்ந்த பல கோயில்கள் அந்நகரை அணிசெய்கின்றன.

அது பற்றியே "கச்சிப் பலதளியும் ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே" என நாவுக்கரசர் நவின்றருளினுர். காஞ்சிபுரத்தின் அதிசயங்கள் குறித்துச் சேக்கிழார் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றிலும், கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் திருநகரப் படலத்திலும், சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணம் விம்மிதப் படலத்திலும் விரிவாக விளக்கிப்பாடியுள்ளனர். சீர்காழிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உளவாதல்போல, காஞ்சிபுரத்திற்கும் பன்னிரண்டு பெயர்கள் வழங்கும். அவைமுறையே காஞ்சிபுரம், பிரளயசித்து, சிவபுரம், விண்டுபுரம், திரிமூர்த்திவாசம், பிரமபுரம், காமபீடம், தபோ

---

1. "Of all the ancient places in South India there is none that can rival the ancient Kanchi in the variety, antiquity and importance of ancient monuments. Here are Jaina and Buddhist, Saiva and Vaishnava temples of the Pallava Chola and later times, which it would be difficult to imagine in any other place".

—K. N. DIKSHIT.

மயம், சகற்சாரம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம் என்பனவாகும். இப்பெயர்க்காரணங்களால் காஞ்சி புரத்தின் அருமை பெருமைகளை யாவரும் அறிந்தின் புறலாம்.

காஞ்சியைப் பற்றிய தனிக் கவிதைகள் :

காஞ்சிபுரத்தைப் பற்றிப் பலப்பல சிறந்த அழகிய இனிய தனிக் கவிதைகள் இலக்கியங்களில் வழங்குகின்றன. அவைகள் அறிஞர்களின் உள்ளங்களைப் பெரிதும் கொள்ளை கொள்ள வல்லவை.

"ஏரி இரண்டும் சிறகா, எயில்வயிருக்,
காருடைய பீலி கடிகாவா,—நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு."

"மலிதேரான் கச்சியும், மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும்;—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா; கச்சி
கடல்படுவ எல்லாம் படும்."

"ஆடவர்கள் எவ்வா றகன்றொழிவார்? வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா[1]—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான்! இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு?"

"தொல்லை மறைதேர் துணைவன்பால், ஆண்டுவரை
எல்லை இருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிர்அனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி இடை."

"பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்
உண்மையால் உண்டிவ் வுலகு"

---

1. வெஃகா—யதோத்காரி கோயில்
பாடகம்—பாண்டவதூதர் கோயில்
ஊரகம்—உலகளந்தபெருமாள் கோயில்
பஞ்சரம்—கருப்பக்கிரகம், திருவுண்ணாழிகை

என்பன போன்ற பல தனிப்பாடல்கள், காஞ்சியின் பெருமையைக் குறிப்பனவாகத் தண்டியலங்காரம், வீரசோழியம், யாப்பருங்கலம் முதலிய தமிழிலக்கண நூல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டம்காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச்சாத்தன்—கைச்செண்டு,
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு."

என்னும் பழைய வெண்பாச் செய்யுள் ஒன்று, அடியார்க்கு நல்லார் அவர்களால் தமது சிலப்பதிகாரவுரையில் மேற்கோளாக எடுத்தாளப் பெறுகின்றது.

காஞ்சியும் கரிகாலனும் :

காஞ்சிபுரம் கரிகாற் பெருவளத்தானால் நான்கு காதம் விரிவாக்கப் பட்டு, நாற்பத்தெண்ணாயிரம் வேளாண் மக்களைக் குடியேற்றப் பெற்றது என்னும் செய்தி,

"என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற் கரி காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதம்நான்குட்பட வகுத்துக்
குன்று போலும்மா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும்"

என்னும் பெரிய புராணப் பாடலாலும் தெரிகின்றது.

"விண்ணு ளார்மறை கள்வே தம்விரித் தோதுவார்
கண்ணு ளார்கழ லின்வெல் வார்கரி காலனை
நண்ணு வார்எழில் கொள்கச் சிநகர் ஏகம்பத்து
அண்ண லார்ஆடு கின்ற அலங்கா ரம்மே"

எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரமும் கரிகாலனைக் குறிப்பிடுதல் காணலாம்.

ஏகம்பநாதர் :

காஞ்சிபுரம் ஏகம்பநாதர் கோயிலைப் போலவே, கச்சபேச மும் முதன்மையும் சிறப்பும் வாய்ந்த கோயில் ஆகும். இறைவன் 'வெள்ளங் காட்டி வெருட்டிட' அம்பிகை நடுக்கம் (கம்பம்) கொண்டு சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்ட காரணத் தால், கோயில் 'ஏகம்பம்' எனப் பெயர் பெற்றது. ஆம்பிரம் - மாமரம். இறைவன் ஒரு மாமரத்தின் கீழ் (ஏகம் + ஆம்ப்ரம் = ஏகாம்பரம்) எழுந்தருளியிருத்தலின், ஏகாம்பரநாதர் எனப் பெயர் பெற்றார் எனினுமாம்.

" முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கால ரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றேது "

எனவரும் சுவைமிகுந்த காளமேகப் புலவர் பாடலில், ஏகாம்பர நாதர் 'ஒருமாவின் கீழர்' எனக் குறிப்பிடப்படுதல் அறிதற்குரியது.

கச்சபேசம் :

'கச்சபேசம்' என்னும் தொடர், கச்சபம் + ஈசம் என்னும் இரு சொற்கள் கொண்டது. கச்சபம்—ஆமை. ஈசம் - கோயில், ஈசன் எழுந்தருளியிருப்பது. இச்சொல் ஈச்சுரம், ஈச்சரம் எனவும் வழங் கும். அமிர்தம் பெறுவதன் பொருட்டுத் தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது, திருமால் ஆமை வடிவம் கொண்டு மந்தர மலையைத் தாங்கினர். அந்நிலையிற் செருக்கு எய்திய திருமால் கடலைப் பெரிதும் கலக்கி உழக்கினர். அதுகண்டு தேவர்களும் பிறரும் அஞ்சி நடுங்கி வருந்தி அலமந்தனர். அது போது சிவபிரான் தோன்றி, ஆமை வடிவை மாய்த்து, அதன் செருக்கை ஒழித்து, அதன் ஓட்டினைத் தமது திருமார்பில் தரித் தார். தமது பிழையுணர்ந்து கழிவிரக்கம் கொண்ட திருமால், தமது கச்சப் (ஆமை) வடிவில் சிவபெருமானை வழிபட்ட திருக் கோயிலே 'கச்சபேசம்' எனப் பெயர் பெற்றது. கச்சப + ஆலய + ஈசுவரர் என்னும் சொற்றொடரே கச்சாலீசுவரர் என மருவி வழங்கி வருகின்றது. 'கச்சாலை' என்னும் மரு உச்சொல் 'கச்சபேசம்' என்பதனைக் குறிக்க நெடுங்காலத்திற்கு முன்னரே வழங்கி

யிருக்கின்றது. கச்சாலீசுவரரைப் பற்றிய குறிப்பு தமிழிலக்கியங்களில் எங்கேனும் வந்துள்ளதா? எனச் சிந்தித்தபொழுது, பின்வரும் இரண்டு பாடல்கள் நினைவிற்கு வந்தன.

"நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க்கு இறை."

"சீலத்தால் ஞானத்தால் தேற்றத்தால் சென்றகன்ற
காலத்தால் ஆராத காதலால்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாம்
கச்சிக்கச் சாலைக் கனி."

இவ்விரண்டு பாடல்களும் 'தண்டியலங்காரம்' என்னும் அணி இலக்கண நூலில் மேற்கோட் செய்யுள்களாக வருகின்றன. கயிலாசநாதர் கோயிலைக் கட்டுவித்த இராசசிம்மன் (கி.பி. 685-705) என்னும் பல்லவ மன்னனின் அவைக்களப் புலவராக விளங்கியிருந்த தண்டி என்னும் வடமொழிப் புலவர் இயற்றிய காவ்யாதர்ஸம் என்னும் வடமொழிநூலின் மொழி பெயர்ப்பே, தமிழ்த் தண்டியலங்காரநூல். இதனைத் தமிழில்மொழிபெயர்த்து இயற்றியவர் அநபாய சோழனின் காலத்தவர் என்பதும், ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பெருந்தகையின் மாணவர் என்பதும், அந்நூலின் பாடல்களில் வரும் குறிப்புக்களைக்கொண்டு தெளியப்படுகின்றன. காஞ்சிபுரத்தில் மிகமுதன்மை வாய்ந்த திருக்கோயில்களுள் ஒன்றுகத்திகழும் கச்சபேசம் பற்றியும், தேவாரத்திருப்பதிகங்கள் பாடப்பெற்றிருத்தல் வேண்டும். அவைகள் இப்போது கிடையாமற் போயினமை, நம்மனோர் தவக்குறைவேயாகும். எனினும் இவ்விரண்டு பழம் பாடல்களும் கச்சாலீசுவரர் பெருமானை நாம் நினைந்து துதித்து உய்தற்குத் துணைபுரிவன ஆகும்.

"கச்சுற்றப் பாரப யோதர முலையாள்முன்
கற்புத்தப் பாதுல கேழையும்
ஒக்கப்பெற் ருள்வினை யாடிய
கச்சிக்கச் சாலையில் மேவிய பெருமாளே."

எனவரும் திருப்புகழ்ப்பாடலும் ஈண்டு உணர்தற்குரியது.

(தொடரும்)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 13, இதழ் 10-ன் தொடர்ச்சி]

I

SAMBANDAR

(Tamil: TIRU JNANA SAMBANDAMURTI SWAMI)

24. வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனுமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.

Our specimens of Sambandar's poetry may end with a verse which is a kind of benediction, often set as an auspicious word on the front page of a book.

24 Blest be the Brahmans pure, the heavenly ones, and kine.
Cool rain fall on the earth! May the king's glory shine!
Perish all forms of ill! Let Hara's name resound!
May sorrow pass away, from earth's remotest bound.

(To be Continued)

சிவ சிவ

SRIVAIKUNTAM SRI KUMARAGURUPARA SWAMIGAL ARTS COLLEGE EDUCATIONAL

TOUR FUND Rs. 20,000/-

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal in grateful memory of Saint Kumaraguru parar, who for spreading Tamil Culture and Saiva Siddhanta Philosophy crossed up to North India against great odds as far back as the Seventeenth Century and clung so fast to his mission and carried it out so successfully residing at Banaras, that he not only came to be known as KASIVASI but has even handed down that title to his successors of His Holy Order even to the present day, and with a view to instil in the young minds, a broad outlook of life girded by a strong sense of self reliance, devotion to duty, pertinacity of purpose and strong belief in the never failing and well merited divine help. This endowment is styled as "Srivaikuntam Sri Kumaraguru para Swamigal Arts College Educational Tour fund".

2. This endowment consists of Rs 20,000/- invested in long term fixed deposits in the following manner:

1. Co-operative Central Bank Ltd., Kumba konam; Rs 10,000/-; Interest at 5½% per annum; FDR. No. 8915 for Five years from 10—10—1962 to 10—10—1967.

2. Central Bank of India Ltd., Kumbakonam; Rs 10,000/-; Interest at 5% per annum; FDR. No. 18/24 for five years from 23-9-61 to 23-9-1966. The above said capital will be invested in highest interest yielding Government securities as and when returned from the Bank. The administration of the fund shall vest in the Donor and his successors-in-interest.

3. Out of the interest accruing annually on the capital, after meeting the incidental charges, a sum of Rs 450/- shall be awarded every year to two students and a lecturer on the staff of Sri Kumaragurupara Swamigal Arts College, Srivaikuntam at the rate of Rs. 150/- each for making an educational tour to Benaras; and the balance shall be handed over to the President of the Educational Society managing Sri Kumaragurupara Swamigal Arts College, Arulnandi nagar, Srivaikuntam for purchasing books for the College Library. The discretion in the choice of books to be purchased for the Library shall entirely vest in the Educational Society managing the College.

4. The conditions for the grant of award for Educational tour to Benaras shall be as follows:—

(a) He must be a Hindu irrespective of caste, creed or sex with strong faith in Saiva Siddhanta Philosophy and its tenets and with love for Tamil Literature and must be able to recite the

whole of "KANDAR KALIVENBA" and "SAKALAKALA-VALLIMALAI" sung by Sri Kumaragurupara Swamigal.

(b) He must be of good character and conduct, diligent and popular in his work with abiding and prominent interest in the well being and prestige of the institution.

(c) He must have a natural taste for travel with eagerness to have correct knowledge and proper judgment of men and things.

5. Persons with the requisite qualifications must apply to the Secretary of Sri Kumaragurupara Swamigal Arts College, Educational Society on or before 31st January of each year and the Managing Committee shall select a lecturer on the staff and two students of the College and communicate their names for approval to the Donor or his successors-in-interest. The result shall be announced before 15th March every year so as to enable the recipient of the award to complete the Educational tour before 10th June. The amount of Rs. 150/- shall be paid to each of them by the President, on application by the selected persons ten days before the commencement of their journey and each member on his return journey shall bring with him one pot of Ganges Water from Prayag to be handed over to the Managing Trustee of Sri Kumaragurupara Swamigal Mutt, Srivaikuntam for Senthilandavan Abishegam at Tiruchendur. The educational tour shall be completed within 10th June of the year of award, and the Secretary of the College Educational Society shall have the right of recovering the amount paid from those who do not perform the journey within the stipulated time. A

lecturer recipient of the above award shall not be eligible for the award again before the lapse of 6 years from the date of his first tour.

6. If in any year there is balance in the Educational tour amount on account of any one failing to avail himself of the above award, the unspent amount shall be sent in equal shares to the Headmasters of the following High Schools for purchase of books to their School Libraries:—

1. Sri Kumaragurupara Swamigal Boys High School, Srivaikuntam.

2. Sri Kumaragurupara Swamigal Board Girls High School, Srivaikuntam.

3. Sri Kumaragurupara Swamigal High School, Aduthurai.

The Headmasters of these High Schools should purchase books to their School Libraries for the amount received by them and send a report to the Donor and his successors-in-interest stating the names of books purchased, the name of the author and the price of each.

7. The balance of net interest after setting apart Rs.450/- for the Educational tour shall be sent every year to the President of Educational Society managing the Sri Kumaragurupara Swamigal Arts College, Arulnandi Nagar, Srivaikuntam for purchase of books to the College Library. A statement showing the names of books with the names of the author and the cost of each book should be sent by the President of the Educational Society, Srivaikuntam, to the Donor

and his successors-in-interest every year within three months from the receipt of the amount from the Donor.

8. The Managing Committee shall submit to the Donor and his successors-in-interest every year the names of persons who completed Educational tour, the amount paid to each, as well as the amount sent for the purchase of books as mentioned in paragraph 6 supra.

9. The amount to be awarded each year may vary according to the interest received from time to time. The endowed capital shall remain in the name of the Donor and his successors-in-interest. The said income shall not be diverted to any other purpose than those mentioned herein above.

NOTE: The conditions of the endowment were accepted by the Sri Kumaragurupara Swamigal Arts College Managing Committee Srivaikuntam in its resolution dated 4—11—1962.

Tirupanandal
Dated 6-11-1962. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

1137-ம்ளு, ஆனி, ஆடி, மாதங்களில்

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
9547	ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத் தமிழ் (குறிப்புரை முதலிய வற்றுடன்)	வித்துவான் C. ஜெகந்நாதாச்சாரியர், உ. வே. சா. நூல்நிலையம்.
9548	விஞ்ஞானத்தின் சில அம்சங்கள்	சி. வி. இராமன், மொழிபெயர்ப்பு. ஆர். கே. விசுவநாதன். பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய சர்க்கார்.
9549 to 58	நக்கீரதேவர் இயற்றிய திருஈங்கோய் மலை யெழுபது (உரையுடன்)	பாலூர் கண்ணப்ப முதலியார்
9559	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர் 1961—62.	ஆடுதுறை.
9560	நினைத்த கதை முடித்த விநாயகப் பிள்ளையார் வளா கத்தல புராணம்.	கவிராஜபண்டிதர் இ. ராமசுப்பிரமணிய நாவலர்.
9561	ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு. வெளியீடு எண் 524.	தருமை யாதீனம்.

9562 திருவல்லம் திருப்பதிகம். வெளியீடு எண் 523. — ஷை

9563 திருக்களிற்றுப் படியார் (உரைநடையுடன்) வெளியீடு. எண் 504. — ஷை

9564 உண்மை விளக்கம் (உரையுடன்) வெளியீடு எண் 526. — ஷை

9565 சிவஞானபோதம் — ஷை

9566 to 79 திருக்குடமுக்குத் திருமுறைத்திரட்டு (மாசிமக மலர்) — ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

9580 to 89 திருச்செந்தூர் கந்தர்கலிவெண்பா சகலகலா வல்லிமாலை, மூலமும் குறிப்புரையும். — திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் அஷ்டபந்தன கும்பாபிஷேக வெளியீடு, ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

9590 நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை மூலமும் தெளிவுரையும். — இரா. இராதாகிருஷ்ணன், எம். ஏ., வள்ளலார் ஞானசபை புதுக்கோட்டை.

9591 விநாயகர் அகவல் (மூலமும் உரையும்) — சிந்துபூந்துறை; சிவத்திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ. சித்தாந்த சைவச்செந்நெறிக் கழகம், 73 - கீழப்புதுத்தெரு, திருநெல்வேலி 6.

9592 ஸ்ரீ முருகப் பெருமான் தோத்திரத்திரட்டு. — சு. நயினுர் முப்பனுர் அவர்கள் மளிகை நிர்-8 கழுவேற்றி முடுக்குத் தெரு, திருநெல்வேலி, [டவுண்.

9593 சிவப்பிரகாசம் சீர்மைக் கட்டுரை (பொது அதிகாரம்-பிற்பகுதி). — திருவாவடுதுறை ஆதீனம்.

9594	கந்தபுராணம் வரலாறு.	சென்னை ஸ்ரீ கந்தசுவாமி கோயில் என விளங்கும் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்கந்தசஷ்டி நடைபெறும் 34ம் ஆண்டு லக்ஷார்ச்சனை மலர்.
9595	கந்தபுராண வரலாறு	சுவாமிமலை, ஸ்ரீ சுவாமிநாத சுவாமி தேவஸ்தான வெளியீடு.
9596	பண்டார சாத்திரம் (உபதேசப் பஃறொடை–பஞ்சாக்கரப் பஃறொடை) உரையுடன்.	திருவாவடுதுறை ஆதீனம்.
9597 to 99	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பாவும் திருவொற்றியூர், வடிவுடை மாணிக்கமாலையும்.	வெளியிடுவோர்: பொ. முத்தரசு எம். ஏ. பி. டி., தமிழ் விரிவுரையாளர், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லூரி, ஸ்ரீவைகுண்டம்.
9600	Voice of the Himalayas.	Sri. Swami Sivananda.
9601	Unity of Religious.	ஷ
9602	La Legende Des Jenn Deciva A Madurai.	Par. R. Dessigane, P. Z. Pattabiraman et. J. Filliozat.
9603	தில்லைச்சிற்றம்பலவன் கோயில்	J. M. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L.,
9604	ஸ்ரீமத் கம்பராமாயணம், யுத்தகண்டம், முதற்பகுதி 1—1210 செய்யுட்கள்).	டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல்நிலையம், அடையாறு மதராஸ்-20.
9605	பன்னிரு திருமுறை வரலாறு முதற்பகுதி (முதல் ஏழு திருமுறைகள்)	வித்துவான். க. வெள்ளைவாரணன்.

(தொடரும்)

'திருமுறை வெளியீடுகள்'

		ரூ. ந. பை
1	விநாயகர் திருமுறை ...	0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்) (புதிய பதிப்பு) ...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம்	2 00
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு)	1 30
7*	திருவாசகம்	0 56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு) ...	2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்) ...	0 56
10*	திருமந்திரம் .. (புதிய பதிப்பு) ...	2 25
11	பதினோராந்திருமுறை .. (அச்சில்)	
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு) ...	0 25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன் ...	0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்)	
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு ...	0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்) ...	3 00
17	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்) ...	1 75
18	கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள்	2 75
19	.. யுத்த தேவகாண்டம்	2 00
20	.. தக்ஷகாண்டம்	1 50
21	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன் ...	0 25
22	கந்தரனுபூதி ...	0 13
23	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன் ...	0 37
24	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும் ...	0 06
25	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும் ...	0 37
26	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0 50
27	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0 06
28	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும் ...	1 50
29	திருக்குறள் – பொருட்பால்	2 50
30	திருக்குறள் – காமத்துப்பால்	1 00
	ஷ 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும் ...	4 00
31	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் ...	0 75
32	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0 13

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574

33	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
34	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
35	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை - மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2 75
36	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் }	...	1 25
37	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
38	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை }	...	1 00
39	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
40	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
41	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
42	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
43	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
44	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
45	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
47	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்ப	...	1 37
48	௸ ௸ பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
49	௸ ௸ காமத்துப்பால் ௸	...	1 20
50	அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன்	...	0 50
51	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
52	கந்தரநுபூதி-தெளிவுரையுடன்	...	0 35
53	திருவாரூர்-திருப்பனுவல்கள்	...	0 10
54	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
55	பழமொழித்திருமுறை	...	0 25
56	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோயில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம். ஸ்ரீவைகுண்டம் – '62